முச்சந்தி முரளி



"உந்த விளக்கமெல்லாம் பொதுவேட்பாளர் வேண்டாமெண்டுறவைக்கு கடைசிமட்டும் விளங்காது கண்டியளோ"

Registered as a Newspaper

பக்கங்கள் – 12

விலை – ரூபா 50

# உதயன்

சுடர் : 39
கதிர் : 201

வெள்ளிக்கிழமை
14 ஜூன் 2024

## குளவிக் கொட்டுக்கு இலக்காகி 35 மாணவர்கள் சிகிச்சையில்!

கிளிநொச்சி, ஜூன் 14
குளவிக் கொட்டுக்கு இலக்காகி 35 மாணவர்கள் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். இந்தச் சம்பவம் தருமபுரம் மத்திய கல்லூரியில் நேற்று இடம்பெற்றுள்ளது.

பாடசாலை வளாகத்தில் இருந்த நாவல் மரத்திலிருந்து கலைந்த குளவிகளே மாணவர்களைக் கொட்டியுள்ளன. இதையடுத்து 35 மாணவர்களும் 4 ஆசிரியர்களும் மருத்துவமனையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்ட 11

## கஞ்சா வியாபாரி கைது

யாழ்ப்பாணம், ஜூன் 14
கஞ்சா வியாபாரியொருவர் வடமராட்சியில் வைத்து நெல்லியடி பொலி 11



### வடமராட்சியில்
## 135 கிலோ கஞ்சா மீட்பு!

யாழ்ப்பாணம், ஜூன் 14
யாழ்ப்பாணம் - வடமராட்சி கிழக்குத் தாளையடிப் பகுதியில் 135 கிலோ கேரளக் கஞ்சாப் பொதிகள் நேற்று வியாழக்கிழமை மீட்கப்பட்டுள்ளன. 11

# தமிழ்ப் பொதுவேட்பாளரால் சமஷ்டிக்குப் பாதிப்பில்லை!

### விக்னேஸ்வரன் விளக்கம்



**யாழ்ப்பாணம், ஜூன் 14**
**பொதுவேட்பாளரை நிறுத்துவதால் எமது சமஷ்டிக் கோரிக்கை அடிபட்டுப்போகும் என்ற எண்ணம் சுமந்திரனின் சட்டத்தரணி மூளையில் உதித்திருக்கும் ஒரு கற்பனைப் பிராந்தி - இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினரும் வடக்கு மாகாணசபையின் முன்னாள் முதலமைச்சருமான சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.** 11

### பல்கலை.கல்விசாரா ஊழியர்களுக்கு
## கொடுப்பனவுகளை அதிகரிக்க முடியாது!
### ஜனாதிபதி ரணில் அறிவிப்பு



கொழும்பு, ஜூன் 14
இந்த வருடத்தில் கொடுப்பனவுகள் எதையும் அதிகரிக்க முடியாது என்றும், ஆதலால், பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்களை கடமைக்குத் திரும்புமாறும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார். 11

## தபால் ஊழியர்கள் நேற்றுப் போராட்டம்

மன்னார், ஜூன் 14
ஒன்றிணைந்த தபால் தொழிற்சங்க முன்னணியினரின் ஏற்பாட்டில் நாடளாவிய ரீதியில் இடம்பெற்றுவரும் போராட்டத்துக்கு ஆதரவாக வடக்கிலுள்ள தபால் ஊழியர்களும் போராட்டத்தில் ஈடுபட்டனர். 11

### ஜனாதிபதித் தேர்தல்
## யாரை ஆதரிப்பது? இன்னும் முடிவில்லை
### முஸ்லிம் காங்கிரஸ் அறிவிப்பு

கொழும்பு, ஜூன் 14
ஜனாதிபதித் தேர்தலின்போது எந்த வேட்பாளரை ஆதரிக்க வேண்டும் என்பது தொடர்பில் கட்சி இன்னும் இறுதியான - உறுதியான முடிவை எடுக்கவில்லை என்று ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம் தெரி 11

## மகளை தவறான வகையில் படமெடுத்த தாய் கைது

முல்லைத்தீவு, ஜூன் 14
தனது மகளை தவறான வகையில் அலைபேசியில் ஒளிப்படம் எடுத்த தாயொருவர் கைது செய்யப்பட்டுள்ளார். இந்தச் சம்பவம் முல்லைத்தீவு - புதுக்குடியிருப்பு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது. 11



## வன்முறைக்குழு அட்டகாசம்; நகை, பணம் கொள்ளை!
### வட்டுக்கோட்டையில் சம்பவம்

யாழ்ப்பாணம், ஜூன் 14
வட்டுக்கோட்டையில் நேற்று மதியம் வன்முறைக் குழு அட்டகாசத்தில் ஈடுபட்டதுடன் வீட்டிலிருந்த நகை மற்றும் பணத்தை திருடிச் சென்றுள்ளது. 11

## மாவாவுடன் இளைஞன் கைது!

யாழ்ப்பாணம், ஜூன் 14
மாவாவை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில், இளைஞர் ஒருவர் மானிப்பாய் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.
சங்கானைப் பகுதியில் 11

## ஊடகவியலாளரின் வீடுமீது மர்மக் குழுவொன்று தாக்கு

யாழ்ப்பாணம், ஜூன் 14
ஊடகவியலாளர் ஒருவரின் வீட்டின் மீது, மர்மக் குழுவொன்று தாக்குதல் நடத்தியுள்ளது.
யாழ்ப்பாணம் - அச்சுவேலியில் உள்ள, ஊடகவியலாளரான பிரதீபன் என்பவரது வீட்டின் மீதே இவ்வாறு தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதுடன், வீட்டில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மோட்டார்சைக்கிளுக்கும், இதர சில உடைமைகளுக்கும் தீ வைக்கப்பட்டுள்ளது.
ஐந்து பேரைக் கொண்ட வன்முறைக் குழுவொன்றே இந்தத் தாக்குதலை நடத்தியுள்ளதாக பொலிஸாரின் விசாரணைகளில் தெரிவிக்கப்பட்டுள்ளது.
'திருநங்கைகளின் வாழ்க்கையை தவறாகச் சித்தரிக்காதே' என அச்சடிக்கப்பட்ட துண்டுப் 11

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

பொதுவேட்பாளர் தொடர்பில்

# ரணில்சொன்னது நடக்குமோ என அச்சம்

## விக்னேஸ்வரன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 14

தமிழ்ப் பொதுவேட்பாளர் விடயத்தில் நாம் ஒருவரை நிறுத்தமாட்டோம் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கூறியது நடந்துவிடுமோ என பயமாக இருக்கின்றது என்றுநாடாளுமன்ற உறுப்பினர்சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.


அவரது இல்லத்தில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

வடக்கு மாகாணசபை முன்னாள் உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் தமிழ்ப் பொதுவேட்பாளராக ஒருவரும் இல்லையென்றால் போட்டியிடுவேன் என்று குறிப்பிட்டிருக்கின்றார். ஆனால் சிவில் சமூகத்தினதும், அரசியல் கட்சிகளினதும் அனுமதியுடனும் களமிறங்குபவருக்குத்தான் தமிழ் மக்களின் அங்கீகாரம் கிடைக்கும்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாங்கள் யார் பொதுவேட்பாளர் என்பதிலேயே சண்டைபிடிப்போம் என்று குறிப்பிட்டிருந்தார். அவர் குறிப்பிட்டதைப்போன்றுதான் நடக்குமோ தெரியவில்லை. நாம் ஒவ்வொருவரும் தனித்தனி தீவுகளாக இருக்கின்றோம். சிவில் சமூகத்தவர்தான் ஒன்றிணைக்கவேண்டும்.

மேலும், தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுர தலைமையிலான குழுவினர் யாழ்ப்பாணம் வந்தனர். அவர்கள் வடக்கு - கிழக்கை பிரித்தவர்கள். இதனால் தமிழ் மக்கள் வாக்களிக்கமாட்டார்கள் என அநுரவுக்கு நாடாளுமன்றத்தில் வைத்துக் கூறியிருக்கின்றேன். ஆனால், தான் இங்கு வரும்போது மக்கள் வரவேற்பு இருந்தது என அவர் எனக்கு கூறியிருந்தார். மக்கள் வரவேற்றாலும் வாக்களிக்கமாட்டார்கள் என அவருக்கு நாடாளுமன்றத்தில் வைத்தே நான் பதிலளித்திருந்தேன். இதனால்தான் அவர் என்னை வந்து சந்திக்கவில்லை. இலங்கையில் அனைவருக்கும் சம உரிமை வழங்கவேண்டும் என அநுர கூறியிருந்தார். அவர்கள் அவ்வாறு சொல்வது, அனைவரும் சிங்களம் கற்பதன் மூலம் ஒரே நிலைக்கு வரமுடியும். அப்படித்தான் அவர்களின் சம உரிமை இருக்கும் - என்றார். (ஒ-125)



# பாதுகாப்புக்கடவை தேவை பளை மக்கள் ஆர்ப்பாட்டம்

கிளிநொச்சி, ஜூன் 14

**பாதுகாப்பான ரயில் கடவை அமைக்கக் கோரி பளையில் மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.**

பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகத் துக்குட்பட்ட இந்திராபுரம் கிராமத்துக்குச் செல்லும் பிரதான வீதியில் உள்ள ரயில்கடவை, பாதுகாப்பற்ற நிலையில் உள்ளது. அதனால் தாம் சிரமங்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளது என்று மக்கள் விசனம் தெரிவித்தனர்.

கண்ணிவெடி அகற்றும் பிரிவினரால் அமைக்கப்பட்ட தற்காலிகப் பாதையே 2012 ஆம் ஆண்டில் இருந்து உள்ளது.

பாதுகாப்பான ரயில் கடவை அமைக்கக்கோரி பல தடவைகள் கோரிக்கை விடுக்கப் பட்டபோதும் நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை.

இந்தப் பாதுகாப்பற்ற ரயில் கடவையில் சில ஆண்டுகளுக்கு முன்னர் 16 மாடுகள் ரயிலில் மோதி உயிரிழந்தன.

பொதுமக்களும் அச்சத்துடனேயே பயணிக்கவேண்டியுள்ளது. பாதுகாப்பான ரயில் கடவை ஒன்றை அமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று போராட்டத்தில் ஈடுபட்ட மக்கள் தெரிவித்தனர்.

இது தொடர்பாக பிரதேச செயலரிடம் அவர்கள் மனு ஒன்றையும் கையளித்துள்ளனர். (எ-25-113-9)

# மாணவரின் திறமைகளுக்கு வசதிவாய்ப்பின்மை தடை!

## பேசாலை ம.ம.வி. அதிபர் சுட்டிக்காட்டு

மன்னார், ஜூன் 14

வடக்கு மாகாண மாணவர்கள் கிரிக்கெட் துறையில் சாதிப்பதற்கு, அவர்கள் தமது திறன்களை வெளிக்கொண்டு வருவதற்கு பாடசாலைகளில் வசதிவாய்ப்புகள் மேம்படுத்தப்படவேண்டும் என்று மன்னார் பேசாலை மத்திய மகா வித்தியாலய அதிபர் எஸ்.கே.பிகிராடோ சுட்டிக்காட்டியுள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில், வடக்கு மாகாணத்தில் எமது பாடசாலையிலிருந்து துடுப்பாட்டப் போட்டியில் சிறந்த வீராங்கனையாக தேசிய மட்டத்துக்கு மாணவி சயிந்தினி தெரிவாகி பாடசாலைக்குப் பெருமை சேர்த்துள்ளார்.

எங்கள் பாடசாலை துடுப்பாட்டப் பயிற்சிக்கான வசதிகள் அற்ற நிலையிலேயே காணப்படுகின்றது. ஆயினும் இருக்கும் வளத்தை சிறப்பாகப் பயன்படுத்தி அவர் தன்னை உருவாக்கிக் கொண்டுள்ளார்.

இவரைப் போன்ற வடக்கு மாகாணத்திலுள்ள மாணவர்களின் விளையாட்டுத் திறமைகளை வெளிக்கொண்டுவர பாடசாலைகளில் வசதி வாய்ப்புகளை அதிகரிக்கச் செய்யவேண்டும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ச-60)



வேலணை உத்தியோகத்தர் நலன்புரி சங்கத்தால் வருடாந்தம் முன்னெடுக்கப்பட்டு வரும் குருதிக்கொடை முகாம் நிகழ்வு, வேலணைப் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் கடந்த திங்கட்கிழமை நடைபெற்றது. (ப-66)




பேசாலை சென்.மேரிஸ் வித்தியாலய ஆரம்பப் பாடசாலையின் வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டி, கடந்த திங்கட்கிழமை நடைபெற்றது. பாடசாலை அதிபர் ஜே.எஸ்.வி.பீரிஸ் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில், நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் மற்றும் பேசாலை உதவி பங்குத்தந்தை அருட்தந்தை எஸ்.அல்பன் ராஜ் அடிகளார், மன்னார் வலயக்கல்விப் பணிப்பாளர் ஜி.ரி.தேவராஜா ஆகியோர் கலந்துகொண்டனர். (ப-56-60)



# குப்பைகளைத் தரம்பிரித்து உரிய இடத்தில் போடுங்கள்

## சுகாதாரப் பிரிவினர் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜூன் 14

சாவகச்சேரி நகரப் பகுதிகளில் குப்பைகளைத் தரம்பிரித்து போடுவதற்காக ஐந்து இடங்களில் வர்ணத் தொட்டிகளை நகரசபையினர் அமைத்துள்ளனர்.

சாவகச்சேரி பேருந்து நிலையம், டச்சு வீதிச் சந்தி, ரயில் நிலைய வீதி, பிரதேசசெயலகம் முன்பாக மற்றும் மருத்துவமனை முன்பாக இந்தத் தொட்டிகள் வைக்கப்பட்டுள்ளன.

நகரப் பகுதி வரியிறுப்பாளர்கள், வர்த்தகர்கள், அரச தனியார் நிறுவனத்தினர் தினமும் சேரும் குப்பைகளைத் தரம்பிரித்து உரிய பெட்டிகளில் போடுமாறு சுகாதாரப் பகுதியினர் அறிவுறுத்தியுள்ளனர். (ச-9)

# விளையாட்டுக்கும் நேரத்தை ஒதுக்கவேண்டும் மாணவர்கள்

## கலாநிதி நடேசன் இரவீந்திரன் தெரிவிப்பு

மாணவர்கள் சிறிது நேரத்தையாவது விளையாட்டுக்கு ஒதுக்கவேண்டும். தொலைபேசி, தொலைக்காட்சி போன்றவற்றை பார்ப்பதில் நேரத்தை செலவிடாது நேரத்தை பயனுள்ள விதத்தில் செலவிட வேண்டும்.

-இவ்வாறு தேசிய கல்வியியற் கல்லூரியின் ஓய்வுநிலை விரிவுரையாளர் கலாநிதி நடேசன் இரவீந்திரன் தெரிவித்தார். பண்ணாகத்தில் சிறுவர் பூங்கா ஒன்றைத் திறந்து வைத்து உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

சமூகசேவையில் ஈடுபட பணம் தேவைப்படுகிறது. அதற்காக நாம் கூட்டாக அணைவரும் சேர்ந்து பணத்தைத் திரட்டி சமூகசேவை செய்தோம். இன்று வெளிநாடுகளில் பல வினைத்திறன் வாய்ந்த சமூக சேவையாளர்கள் உருவாகியுள்ளார்கள். சமூகசேவைகளை கூட்டாக இணைந்து எமது உடல், உள மற்றும் சமூக ரீதியாக சிறப்பு நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும் - என்றார். (ஏ25-125)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# அடுத்துவரும் வாரங்களில் 15 முக்கியமான சட்டங்கள்!

## நீதி அமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 14

**எதிர்வரும் சில வாரங்களில் சுமார் 15 மிக முக்கியமான சட்டங்களை நிறைவேற்றுவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்று நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ச தெரிவித்துள்ளார்.**

கடந்த 18 மாதங்களில் சுமார் 75 சட்டமூலங்கள் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டுள்ளன.

அடுத்த சில வாரங்களில் சுமார் 15 மிக முக்கியமான சட்டங்களை நிறைவேற்றுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. குற்றவியல் நடைமுறைச் சட்டத்திலும் பல திருத்தங்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

அண்மையில் நிறைவேற்றப்பட்ட நீரியல் சட்டத்தை அடுத்த ஆண்டு நடைமுறைப்படுத்தலாம். இதன்மூலம் இந்நாட்டின் கடல் எல்லைகள் வழியாகப் பயணிக்கும் கப்பல்கள் மூலம் 50 மில்லியன் டொலருக்கு மேல் வருமானத்தைப் பெற்றுக் கொள்ளமுடியும் - என்றார். (எ-இ)

# பாலின இடைவெளிப்பட்டியல் இலங்கைக்கு மூன்றாமிடம்

கொழும்பு, ஜூன் 14

உலகளாவிய ரீதியில் குறைந்த பாலின இடைவெளியைக் கொண்ட நாடுகளில் இலங்கை தெற்காசியப் பிராந்தியத்தில் மூன்றாவது இடத்தில் உள்ளது.

வருடாந்த உலகளாவிய பாலின இடைவெளி அறிக்கையின் படி, தெற்காசியப் பிராந்தியத்தில் பங்களாதேஷ் முதல் இடத்தைப் பிடித்துள்ளது.

நேபாளம் இரண்டாவது இடத்திலும், இந்தியா ஐந்தாவது இடத்திலும், பாகிஸ்தான் ஏழாவது இடத்திலும் உள்ளன.

பாலின சமத்துவம் நான்கு முக்கியமான பரிமாணங்களில் அளவிடப்படும் நிலையில், இந்தப் பாலின இடைவெளிக் குறியீடு 2006 முதல் வெளியிடப்பட்டு வருகிறது. உலகிலேயே மிகக் குறைந்த பாலின இடைவெளியைக் கொண்ட நாடாக ஐஸ்லாந்து முதலிடத்தில் உள்ளது.

இதில் பின்லாந்து இரண்டாவது இடத்திலும், நோர்வே மூன்றாவது இடத்திலும், நியூசிலாந்து நான்காவது இடத்திலும், சுவீடன் ஐந்தாவது இடத்திலும் உள்ளன. (எ-இ)


# ரணில் - சர்வார்க் சந்தித்துப் பேச்சு

கொழும்பு, ஜூன் 14

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும், சார்க் அமைப்பின் பொதுச் செயலாளர் கோலம் சர்வார்க்குக்கும் இடையே நேற்றுமுன்தினம் புதன்கிழமை சந்திப்பொன்று நடந்துள்ளது. அதில் சார்க் நாடுகளுக்கிடையிலான பல்வேறு திட்டங்கள் தொடர்பில் எழுந்துள்ள பிரச்சினைகளைத் தீர்ப்பது தொடர்பில் இந்தச் சந்திப்பின்போது கவனம் செலுத்தப்பட்டதுடன், அது தொடர்பில் பாரபட்சமின்றி தலையீடு செய்யவேண்டும் என்று சார்க் பொதுச் செயலாளரிடம் ஜனாதிபதி கேட்டுக் கொண்டார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-இ)

# நட்டத்தை ஈடுசெய்ய பொதுமக்களுக்கு வரி

கொழும்பு, ஜூன் 14



ஸ்ரீலங்கன் விமானசேவையின் நட்டத்தை ஈடுசெய்வதற்கு, ஒவ்வொரு குடும்பமும் 107 ரூபா செலுத்த வேண்டியுள்ளது என நாடாளுமன்ற உறுப்பினர் ஹேஷா விதானகே தெரிவித்துள்ளார். ஸ்ரீலங்கன் விமானசேவை கடந்த ஆண்டு 612 பில்லியன் ரூபா நட்டத்தை சந்தித்துள்ளது. இதனால், இந்தத்தொகை பல்வேறு வரிகளாக மக்களிடமிருந்து அறவிடப்படவுள்ளது என்று அவர் தெரிவித்துள்ளார். (ப-6)

# விடைத்தாள் மதிப்பீடு: கொடுப்பனவு அதிகரிப்பு?

கொழும்பு, ஜூன் 14

கல்விப் பொதுத்தராதர சாதாரணதரப் பரீட்சை விடைத்தாள் மதிப்பீட்டுப் பணிகளுக்கான கொடுப்பனவுகளை அதிகரிப்பது தொடர்பாக அமைச்சரவையால் யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது.

இதற்கென நியமிக்கப்பட்ட குழுவின் அறிக்கை எதிர்வரும் 14 ஆம் திகதி தமக்குக் கிடைக்கும் என்றும், அதை எதிர்வரும் அமைச்சரவை ஒன்று கூடலில் சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் கல்வி அமைச்சு குறிப்பிட்டுள்ளது. (எ-66)

# இலங்கையில் அதிகரிக்கும் முதியோர் எண்ணிக்கை

கொழும்பு, ஜூன் 14

நாட்டில் முதியோரின் எண்ணிக்கை வேகமாக உயர்ந்து வருகின்றது என்று சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. இது தொடர்பில் சுகாதார அமைச்சின் செயலாளர் மருத்துவ நிபுணர் பாலித மஹிபால தெரிவித்ததாவது:-

இலங்கையில் சராசரி ஆயுட்காலம் 79.7 ஆகும். புதிய மதிப்பீட்டின்படி பெண்களுக்கு 83 வயதாக அதிகரித்துள்ளது. நாட்டில் முதியோர் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றமை நமக்குள்ள இன்னொரு பிரச்சினையாகும். அதனால் அடுத்த 5 ஆண்டுகளுக்குள் ஆரம்ப சுகாதார நிலையங்களில் பெரும் சீர்திருத்தத்தை மேற்கொண்டு வருகிறோம் - என்றார். (எ-இ)



# தினம் தெரியுமோ?

எங்கட அப்பன் குதிருக்குள்ள இல்லையெண்ட கதையா, பொதுவேட்பாளர் விசயத்தில எங்கட வீட்டுக் கட்சியின்ர அப்புக்காத்தார் போட்டிருந்த எதிர்ப்பு வேசம் ஏன் எண்ட உண்மை இப்ப எல்லாருக்குமே தெரிஞ்சு போட்டுது. ஆரோட அவருக்கு டீல் இருக்கெண்டும், ஆருக்காக பொதுவேட்பாளரை இப்பிடி அவர் வரிஞ்சு கட்டிக்கொண்டு எதிர்க்கிறார் எண்டதையும், இப்ப கொஞ்சநாளா சிங்களக்கட்சிக்காரர்களோட நடக்கிற சந்திப்புகளையும் ஒரு கோர்வையாக்கிப் பார்க்கிற எல்லாருக்குமே வடிவா விளங்கும். பொதுவேட்பாளருக்கு ஆதரவா தீயா வேலை செய்யிற சிவில் அமைப்பு கொஞ்சநாளைக்கு முதல் பொதுவேட்பாளருக்கு எதிராக் கருத்துச் சொல்லிக்கொண்டிருந்த இந்த அப்புக்காத்தாரைச் சந்திச்சது. அப்ப அந்த சிவில் அமைப்புச் சொல்லுற விசயங்களையெல்லாம் சரியெண்டு சொல்லி தலையாட்டியுமிருக்கிறார். பிறகு 'இதைப்பற்றி பொது விவாதம் செய்வம்' எண்டு அப்புக்காத்தாரே முடிவெடுத்து, பெருமெடுப்பில அதுக்கான வேலையளிலையும் இறங்கிட்டார்.

எலக்சனுக்கு பிரசாரம் பண்றவை ஒவ்வொரு வீட்டுக்கும் நாலைஞ்சு நோட்டீசை அனுப்பிற மாதிரி, இவரும் எல்லா வீட்டுக்கும் நாலைஞ்சு அழைப்பிதழ்கள் அனுப்பி இருக்கிறார். அதில பகிடி என்னெண்டால் நாலைஞ்சு வருசத்துக்கு முதல் செத்துப்போனவைக்கும் அப்புக்காத்தாரின்ர மீட்டிங் அழைப்பிதழ் வந்திருக்கு. சனங்களைப் பற்றி அந்தளவுக்கு 'அப்டேட்டில' இருக்கிறார் அப்புக்காத்தார். தபால் செலவும் அவரின்ர காசில்லைத்தானே. மூண்டு மாதத்துக்கு ஒருக்கா பார்லிமெண்டில கட்டுக்கட்டா குடுக்கிற முத்திரைக்கும், பேப்பருக்கும், என்வலப்புக்கும் ஏதும் வேலை வைக்கத்தானே வேணும். அதாலதான் இப்பிடிச் செத்தவைக்கும் அழைப்பிதழ் அனுப்பியிருக்கிறார் போல. ஆனால் அந்த மீட்டிங்குக்கு மண்டபம் முழுக்க ஆக்கள் வந்தவை. வந்த சனத்தைப் பார்த்து அப்புக்காத்தார், எல்லாரும் தனக்காக வந்தவை எண்டுதான் நினைச்சவர். ஆனால் மேடையில அப்புக்காத்தார் பேசினதுக்கு வந்த கைதட்டவிட, குத்துவிளக்குக்கார அப்புக்காத்து மேடையில பொதுவேட்பாளருக்கு சப்போட்டா கதைக்கேக்க வந்த கைதட்டுதான் கூட. இப்பிடிப்பட்ட நிலையில தான் 'பொதுவேட்பாளர் எண்டது ஒரு விஷப்பரீட்சை. அப்பிடி ஒராளைநிப்பாட்டினா நாங்கள் எதிராப் பிரசாரம் செய்து தோக்கடிப்பம்' எண்டு தன்ரபாட்டில அறிவிச்சவர்.

அவரின்ர வீட்டுக்கட்சி, பொதுவேட்பாளர் விசயத்தில இன்னும் ஒரு முடிவெடுக்கமுதலே முந்திரிக் கொட்டைமாதிரி இவர் 'பொதுவேட்பாளருக்கு எதிரா வேலை செய்வன்' எண்டு எப்பிடிச் சொல்ல ஏலும்? அப்ப கட்சி வேற, தான் வேற எண்டதை அப்புக்காத்தார் சொல்லாமல் சொல்லுறாரோ? இப்பிடிக் கட்சி முடிவெடுக்க முதலே தானே ஒரு முடிவை எடுத்து அதைக் கட்சியிட்ட திணிக்கிறதை அப்புக்காத்தார் கனகாலமா செய்து கொண்டுதான் வாறார். ஆனால் அந்தப்பருப்பு இனியும் வேகுமோ எண்டதுதான் சந்தேகம். இப்ப இருக்கிற வீட்டுக்கட்சியின்ர மத்தியகுழுவில கனபேர் அப்புக்காத் தார் சொல்றதுக்கு 'ஆமா' போடுற ஆக்கள் எண்டதால, பொதுவேட்பாளருக்கு எதிராத்தான் வீட்டுக்கட்சி முடிவெடுக்கும்போல தெரியுது. ஆனால் அப்பிடி பொதுவேட்பாளரை ஆதரிக்கிறேலை எண்டு முடிவெடுத்தால் உங்கடபாட்டில இருங்கோவன். சனம் எது சரியெண்டு முடிவெடுக்கும்தானே. 'பொதுவேட்பாளருக்கு எதிராப் பிரசாரம் செய்வன்' எண்டு அப்புக்காத்தார் சண்டித்தனம் காட்டினால் சனமும் தங்கட 'பவரைக்' காட்டாமலோ இருக்கப்போகுதுகள்?



- பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** உற்சாகமான நாள். சுறுசுறுப்பாகச் செயற்படுவீர்கள். குடும்பத்தில் மகிழ்ச்சியான சூழ்நிலை காணப்படும். ஆனால், புதிய முயற்சிகளை மட்டும் தவிர்த்துவிடுவது நல்லது. மாலையில் குடும்பத்துடன் கோயிலுக்குச் சென்று வழிபடுவீர்கள்.

**இடபம்:** குடும்பத்தில் மகிழ்ச்சியான சூழ்நிலை ஏற்படும். தாய்வழிஉறவினர்களால் செலவுகள் ஏற்படும். வாழ்க்கைத்துணையுடன் ஏற்பட்டிருந்த மனவருத்தங்கள் நீங்கி அந்நியோன்யம் அதிகரிக்கும்.

**மிதுனம்:** மனதில் வீண் குழப்பங்கள் ஏற்பட்டு நீங்கும். குடும்பத்தில் சிறு சங்கடம் ஏற்படக்கூடும் என்றாலும், அதனால் பாதிப்பு எதுவும் இருக்காது. குடும்பம் தொடர்பான முக்கியமான முடிவு எடுப்பதைக் கண்டிப்பாகத் தவிர்த்துவிடவும்.

**கடகம்:** புதிய முயற்சிகளை பிற்பகலுக்கு மேல் தொடங்குவது நல்லது. காரியங்களில் அனுகூலம் உண்டாகும். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். தந்தையின் தேவையை பூர்த்தி செய்வீர்கள். எதிரிகளால் ஏற்பட்ட தொல்லைகள் நீங்கும்.

**சிம்மம்:** எதிலும் வெற்றியே ஏற்படும் நாள். வாழ்க்கைத்துணையால் எதிர்பாராத பொருள் சேர்க்கைக்கு வாய்ப்பு உண்டு. கணவன் - மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். பிள்ளைகளின் தேவைகளை நிறைவேற்றுவீர்கள்.

**கன்னி:** புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். எதிர்பார்த்த காரியம் தாமதமானாலும் முடிந்துவிடும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. தாயின் ஆலோசனை பயனுள்ளதாக இருக்கும். வெளியூர்ப் பயணம் தவிர்க்கவும்.

**துலாம்:** தன்னம்பிக்கையுடன் செயற்படுவீர்கள். சகோதரர்களால் ஆதாயம் உண்டாகும். தாயின் உடல் நலனில் கவனம் செலுத்தவும். புதிய முயற்சிகளில் நன்கு சிந்தித்து ஈடுபடவும். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு.

**விருச்சிகம்:** தேவையான பணம் இருந்தாலும் தேவையற்ற செலவுகளும் ஏற்படும். குடும்பம் தொடர்பான முக்கியமான முடிவு எடுப்பதைத் தவிர்க்கவும். உறவினர்களால் காரியங்களில் அனுகூலம் ஏற்படும்.

**தனுசு:** நல்ல வாய்ப்புகள் எதிர்ப்படும் நாளாக அமையும். கணவன் - மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். வாழ்க்கைத்துணையின் ஆலோசனை பயனுள்ளதாக இருக்கும்.

**மகரம்:** புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். எதிலும்பொறுமையைக்கடைப்பிடிக்கவேண்டிய நாள். பிள்ளைகளால் சிறுசிறு சங்கடங்கள் ஏற்படக்கூடும். குடும்பத்தில் மற்றவர்களுடன் அனுசரித்துச் செல்வது நல்லது.

**கும்பம்:** இன்று சாதிக்கும் நாளாக அமையும். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். அவர்களின் தேவைகளை நிறைவேற்றுவீர்கள். செலவுகள் அதிகரிப்பதால் கையிருப்பு கரைவதுடன் சிலருக்குக் கடன் வாங்கவும் நேரிடும்.

**மீனம்:** அனுகூலமான நாளாக இருக்கும். அரசாங்க வகையில் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியக்கூடும். தந்தையின் மூலம் ஆதாயம் கிடைக்கும். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கும் பொருள் சேர்க்கைக்கும் வாய்ப்பு உண்டு.

## நடை பயணம்

சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியின் 150 ஆவது ஆண்டை முன்னிட்டு நடத்தப்படும் நிகழ்வுகள் வரிசையில் நாளை சனிக்கிழமை காலை 7.30 மணிக்கு நடை பயணம் ஆரம்பமாக உள்ளது.

மீசாலை பழைய புகையிரத நிலையத்துக்கு முன்பாக ஆரம்பமாகி ஏ-9 வீதி ஊடாக பாடசாலையை வந்தடையவுள்ளது. நிகழ்ச்சியில் அதிபர், பழைய மாணவர்கள்,பெற்றோர், முன்னாள் ஆசிரியர்கள் அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு பாடசாலைச் சமூகத்தினர் வேண்டுகோள்விடுத்துள்ளனர். (ஒ-25-159)




## சட்டவிரோத கடற்றொழில் முல்லையில் 6 பேர் கைது!

முல்லைத்தீவு, ஜூன் 14

முல்லைத்தீவு - புல்மோட்டைப் பகுதியில் சட்டவிரோத கடற்றொழிலில் ஈடுபட்ட 6 மீனவர்களை முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழில் நீரியல்வளத் திணைக்களத்தினர் நேற்றுமுன்தினம் புதன்கிழமை கைதுசெய்துள்ளனர். அத்துடன் அவர்களிடமிருந்து 6 படகுகளும் மீட்கப்பட்டுள்ளன. தென்பகுதியைச் சேர்ந்தவர்களே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கைதுசெய்யப்பட்ட மீனவர்களை சான்றுப்பொருள்களுடன் நீதிமன்றில் முற்படுத்த முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத்திணைக்களஅதிகாரிகள் நடவடிக்கை எடுத்துள்ளனர். (ச-19)

## தீவுகளிடம் வீழ்ந்தது நியூஸிலாந்து

ரி-20 உலகக் கிண்ணத் தொடரின் 26 ஆவது ஆட்டத்தில் மேற்கிந்தியத் தீவுகள் அணி 13 ஓட்டங்களால் நியூஸிலாந்து அணியை வீழ்த்தியது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற நியூஸிலாந்து அணி முதலில் களத்தடுப்பைத் தெரிவுசெய்தது.

முதலில் துடுப்பெடுத்தாடிய மேற்கிந்தியத் தீவுகள் அணி 20 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 9 விக்கெட்டுகளை இழந்து 149 ஓட்டங்களைப் பெற்றது.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய நியூஸிலாந்து அணி 20 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 9 விக்கெட்டுகளை இழந்து 136 ஓட்டங்களை மட்டுமே பெற்றது. மேற்கிந்தியத் தீவுகள் அணி 13 ஓட்டங்களால் வெற்றிபெற்றது. (எ)



## உயிர்களைக் காப்பாற்ற ஒன்றிணைந்து நடப்போம்


*இன்று சர்வதேச குருதிக்கொடையாளர் தினமாகும். அதை முன்னிட்டு இந்தக் கட்டுரை பிரசுரமாகின்றது.*

குருதிக்கொடை வழங்குவோரைச் சிறப்பிக்கும் வகையில் இன்று ஜூன் 14ஆம் திகதி உலக குருதிக்கொடையாளர் தினமாக உலக சுகாதார நிறுவனத்தால் 2014ஆம் ஆண்டு முதல் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

ABO இரத்த வகையைக் கண்டுபிடித்து நோபல் பரிசு பெற்றவரான கார்ல் லாண்ட்ஸ்டெய்னெரின் பிறந்தாள் அன்றே குருதிக்கொடையாளர் தினம் கொண்டாடப்படுகின்றது. ஒவ்வொரு ஆண்டும் ஒவ்வொரு தொனிப்பொருளில் கொண்டாடப்படும் இந்தத் தினம், இம்முறை 'உயிர்களைக் காப்பாற்ற ஒன்றிணைந்து நடப்போம்' எனும் தொனிப்பொருளில் கொண்டாடப்படுகின்றது.

இந்தத் தினத்தில் குருதிக்கொடையாளர்களும், இரத்ததான முகாம்களை ஒழுங்கமைத்து உயிர் காக்கும் உன்னத பணிக்கு ஒத்துழைப்பு வழங்கி வரும் ஒழுங்கமைப்பாளர்களும் கௌரவிக்கப்படுவர்.

வடமாகாணப் பிராந்திய இரத்த வங்கியான யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை இரத்த வங்கியிலும் தெல்லிப்பழை,பருத்தித்துறை, கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு இரத்த வங்கிகளிலும் தொடர்ச்சியாக இரத்ததானம் செய்து சாதனை படைத்த குருதிக்கொடையாளர்களும், இரத்ததான முகாம் ஒழுங்கமைப்பாளர்களும் எதிர்வரும் 23ஆம் திகதி யாழ்ப்பாணம் தாதியர் பயிற்சிக் கல்லூரி மண்டபத்தில் நடக்கும் நிகழ்வில் கௌரவிக்கப்படவுள்ளனர்.



தற்போது யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில்இருதய சத்திரசிகிச்சை, சிறுநீரக மாற்று சத்திரசிகிச்சை மற்றும் நரம்பியல் சத்திரசிகிச்சை போன்ற பல சத்திரசிகிச்சைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அதனால் குருதியின் தேவை நாளுக்கு நாள் அதிகரித்துள்ளது. எதிர்காலத்தில் குருதிக் கொடையாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்கவேண்டும். அப்போதுதான் வடக்கு மாகாணத்தில் சிறந்த குருதிமாற்று பிரயோக சேவையை மேற்கொள்ளமுடியும். இளைஞர்கள், அச்சத்தையும் மூடநம்பிக்கையையும் தவிர்த்து பெறுமதிமிக்க உயிர்களைக் காப்பாற்ற ஒன்றிணைந்து நடக்க முன்வரவேண்டும்.

திரு.த.றவினதாஸ்
பொதுச் சுகாதாரப் பரிசோதகர்
தேசிய குருதிமாற்று பிரயோகசேவை
பிராந்திய இரத்த வங்கி
போதனா மருத்துவமனை யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

# உதயன்


மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## பொன்முட்டையும் வெள்ளை யானையும்

ஆடின காலும் பாடின வாயும் சும்மாயிராது என்பார்கள். அதுபோலவேதான் கடன்வாங்கிப் பழக்கப்பட்டவர்களுக்கும் எப்போதுமே யாரிடமாவது கை நீட்டிக் கடன்கேட்காவிட்டால் அவர்களுக்குத் திருப்தியிருக்காது. இடம், பொருள், ஏவல் ஏதும் பாராமல், எதிர்ப்பட்டவர்களிடமெல்லாம் இத்தகையபேர்வழிகள் கைநீட்டிக் கடன் கேட்டுவிட்டுத்தான் மறுவேலை பார்ப்பார்கள். இலங்கையின் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும் இவ்வாறு கண்டவர்களிடமெல்லாம் கடன்கேட்கும் ஒருவராக மாறிவிட்டார். எந்த நிகழ்வுக்குப் போனாலும், அவர் யாரிடமாவது நேரடியாகவோ, மறைமுகமாகவோ கடனைக் கேட்கத் தவறுவதில்லை. ரணிலின் இந்த வலைக்குள் உலகத்தையே ஆட்டிப்படைக்கும் எலான் மஸ்க்கே சிக்கிவிட்டாரென்றால், அவரது கடன் கேட்கும் திறன் எவ்வளவு உச்சநிலையில் இருக்கின்றதென்பதை யூகித்துக்கொள்ளலாம். இப்படிப்பட்ட ரணில் விக்கிரமசிங்க, இந்தியாவின் பிரதமராக மோடி பதவியேற்கும் நிகழ்வுக்குச் சென்றிருந்த போதும், தன் வித்தையைக் காட்டத்தவறவில்லை. அவர்களில் ஒருவர்தான் பங்களாதேஷ் பிரதமர் ஷேக் ஹசீனா. ஏற்கனவே பங்களாதேஷிடம் இலங்கை கடன்வாங்கி, அதை வட்டியோடு திருப்பிக் கொடுத்திருந்தது. எனவே இரண்டாம் முறையும் கடன் கேட்காமல், இலங்கையில் இருந்து பங்களாதேஷுக்கு படகுச் சேவையை ஆரம்பிப்பது பற்றி இலங்கை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கதை விட்டிருக்கிறார். அதற்கு பங்களாதேஷ் பிரதமரும் சரியென்று தலையாட்டிவிட்டார். இனிமேல் படகு இறங்குதுறை புனரமைப்பு, பயணிகள் தங்குமிடம் அமைப்பு என்று சொல்லி பங்களாதேஷிடம் இருந்து பணத்தை உருவும் வழி இலங்கைக்கு கிட்டிவிட்டது.

பக்கத்தில் இருக்கும் இந்தியாவுக்கே இன்னும் படகுச்சேவையை சீராக நடத்தமுடியாத இலட்சணத்தில் இருக்கும் இலங்கை, அதையும் தாண்டி பங்களாதேஷுக்கு படகுச்சேவையை நடத்த நினைப்பதை எங்கே போய்ச் சொல்லியழமுடியும்? இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையே இருப்பது மிகக் குறுகலான பாக்கு நீரிணை. சில மணித்தியாலங்களில் அதைக் கடந்து விடமுடியும். படகுச் சேவையில் ஏதும் பழுதென்றால், அடுத்த நொடியே பதறித் துடித்துக்கொண்டு இந்திய - இலங்கைக்கடற் கலங்கள் வரக்கூடிய வசதியும் உண்டு. இவையெல்லாவற்றையும் விட, தமிழக மக்களுக்கும் தமிழ் மக்களுக்கும் இடையே ‘தொப்புள்கொடிஉறவுகள்’ என்று சொல்லக்கூடியளவுக்கு, மிகத்தொன்மையான உறவு நிலைப் பிணைப்புண்டு. அதனால் இந்தப் படகுச்சேவை இருநாட்டுக்கும் மிகமிக அவசியமானதும் கூடவே. நாட்டுக்குப் பொருளாதார ரீதியாகவும் அனுகூலத்தை அள்ளித் தரக்கூடியது. ஆனால் இன்னமும் குறித்த படகுச்சேவை சீராக நடத்தப்படவேயில்லை. ஒரு சில வாரங்கள் மட்டுமே கண்காட்சிக்கு ஓடிவிட்டு, ஓய்ந்துவிட்டது காங்கேசன் துறைக்கும், நாகைப்பட்டினத்துக்குமான படகுச்சேவை. மழையைக் காரணம் காட்டி நிறுத்தப்பட்ட குறித்த சேவை, மழை முடிந்து அனலடிக்கும் காலத்தின் கடைசிக்கந்தாயத்திலும் கூட ஒப்பேறுவதற்கான எவ்வித சமிக்ஞைகளும் இல்லை. இந்த நிலையில்தான், பங்களாதேஷுக்கு படகுச் சேவை நடத்துவதைப் பற்றி , அந்நாட்டுப் பிரதமர் ஷேக் ஹசீனாவிடம் பிரஸ்தாபித்திருக்கிறார் ரணில்.

வெறும் 60 கடல்மைல் தொலைவில் உள்ள நாகைப்பட்டினத்துக்கே படகுச்சேவையை நடத்த வக்கற்ற இலங்கை அரசாங்கம், 1263.43 கடல்மைல் தொலைவில் உள்ள பங்களாதேஷுக்கு படகுச்சேவையை நடத்த நினைப்பதென்பது நகைப்புக்குரியதே. அதுவும் படகு வழியாக பங்களாதேஷுக்கு செல்வதற்கோ, அதேபோல் இலங்கைக்கு வருவதற்கோ அந்தளவு ஆர்வம் இருநாட்டு மக்களுக்கும் இருப்பதாகத் தெரியவில்லை.ஒருவேளை, குறித்த படகுச்சேவை ஆரம்பிக்கப்பட்டாலும் போதிய பயணிகள் இல்லாமல் ஒரு சில நாள்களிலேயே நிறுத்தப்படுவதற்கான சாத்தியங்களே அதிகம். ஏறக்குறைய மத்தள விமானநிலையம் போல, இதுவுமொரு ‘வெள்ளையானைத் திட்டம்’ தான். பொன் முட்டையிடும் காங்கேசன் - நாகை படகுச்சேவையை முதலில் நடத்துங்கள், பின்னர் வெள்ளை யானைத் திட்டம் பற்றி யோசிக்கலாம்.






சர்வதேச நாணயநிதியத்தின்

## 3ஆம் கட்டக் கொடுப்பனவுக்கு நிறைவேற்றுக்குழு அனுமதி!

**கொழும்பு, ஜுன் 14**

**இலங்கைக்கு சர்வதேச நாணயநிதியத்தால் வழங்கப்பட்டுள்ள நீடிக்கப்பட்ட கடன் வசதியின் இரண்டாவது மீளாய்வுக்கான அனுமதி கிடைத்துள்ளது.**

3 ஆவது கட்டக் கொடுப்பனவுக்கான 336 மில்லியன் அமெரிக்க டொலரை வழங்கச் சர்வதேச நாணயநிதியத்தின் நிறைவேற்றுக்குழு அங்கீகாரம் வழங்கியுள்ளது.

அதேவேளை, விரிவாக்கப்பட்ட நிதி வசதி திட்டத்தின் கீழ் மூன்றாவது தவணையை விடுவிப்பதற்கு ஒத்துழைத்த சர்வதேச நாணயநிதிய உறுப்பினர்களுக்கும் அதன் பணிக்குழாமினருக்கும் நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க நன்றி தெரிவித்துள்ளார். (எ-இ)

## இலங்கை - பங்களாதேஷ்; விரைவில் படகுச் சேவை!

*ரணில் – ஹசீனா ஆராய்வு*



கொழும்பு, ஜுன் 14

இலங்கைக்கும் பங்களாதேஷுக்கும் இடையே படகுச்சேவையை விரைவில் ஆரம்பிப்பது தொடர்பாக பங்களாதேஷ் பிரதமர்ஷேக்ஹசீனாவும்ஜனாதிபதிரணில்விக்கிரமசிங்கவும் கலந்துரையாடியுள்ளனர். இந்தியப் பிரதமர் மோடியின் பதவியேற்பு நிகழ்வில் கலந்து கொண்ட பின்னர் இருவரும் இரு நாட்டு வர்த்தக உறவுகள் பற்றிக் கலந்துரையாடியுள்ளனர்.

இந்தக் கலந்துரையாடலின்போதே இரு நாடுகளுக்குமிடையே படகுச்சேவை ஆரம்பிப்பது தொடர்பாகவும் ரணிலும் ஹசீனாவும் கலந்துரையாடியுள்ளனர். (எ-6)

## சம்பள உயர்வுக்கு வரவேற்பு

கொழும்பு, ஜுன் 14

இலங்கை அரசாங்கம் தோட்டத்தொழிலாளர்களின் சம்பளத்தை அதிகரித்தமையை சர்வதேச தொழிலாளர்அமைப்பு வரவேற்றுள்ளது.

சர்வதேச தொழிலாளர் அமைப்பின் பணிப்பாளர் நாயகம் கில்பேர்ட் ஹௌங்போ தோட்டத் தொழிலாளர்களின் சம்பளத்தை அதிகரித்தமைக்காக தொழில் அமைச்சர் மனுஷ நாணயக்காரவுக்கு பாராட்டுத் தெரிவித்துள்ளார்.

ஜெனீவாவிலுள்ள ஐ.நா. தலைமைச்செயலக சர்வதேச தொழிலாளர் அமைப்பு அலுவலகத்தில்இடம்பெற்ற வருடாந்த மாநாட்டிலேயே கில்பேர்ட் ஹௌங்போ தனது பாராட்டைத் தெரிவித்துள்ளார். (எ-25-6)

## இலங்கை முன்னேற்றம்

கொழும்பு, ஜுன் 14

ஆசிய சமூக சேவைத்துறையில் அரசசார்பற்ற நிறுவனங்களின் தரவரிசையில் இலங்கை முன்னேறியுள்ளது. 2022 ஆம் ஆண்டளவில் அடைந்திருந்த கரும்புள்ளியிலிருந்து மீண்டு இந்த ஆண்டு இலங்கை முன்னேற்றத்தைக் கண்டுள்ளது. ஆசிய சமூக சேவைதுறையின் செயற்றிறனை அளவிடும் ‘டூயிங் குட் இன்டெக்ஸ்’ தரப்படுத்தல் சுட்டிக்கு அமைய இலங்கை இந்த முன்னேற்றத்தை அடைந்துள்ளது. (எ-இ)

## இலங்கைக்கு கடத்தப்படவிருந்த இஞ்சி மீட்பு

இலங்கைக்குக் கடத்தப்படவிருந்த சுமார் 9 இலட்சம் ரூபா பெறுமதியான 60 இஞ்சி மூடைகள் தமிழகத்தின் இராம நாதபுரம் மாவட்டத்தில் கைப்பற்றப்பட்டுள்ளன.

வீடொன்றில் பதுக்கி வைக்கப்பட்டிருந்த நிலையில் இவை நேற்றுக்காலை மீட்கப்பட்டுள்ளன. இஞ்சிமூடைகளைக் கைப்பற்றியுள்ள அதிகாரிகள், அந்த வீட்டின் உரிமையாளர் யார் என்பதைக் கண்டறியும் முயற்சிகளை முன்னெடுத்துள்ளனர். (எ-100)

**நாளை**

15.06.2024

**சனிக்கிழமை**

**ஆனி - 01**

சுபநேரம் : 02.53 - 04.23

ராகுகாலம் : 08.53 - 10.23

**நாளொரு நல்வார்த்தை**

**ஆழ்ந்த நம்பிக்கை**
**இமயமலை போன்றது.**
**அதை எவராலும் அசைக்கமுடியாது...!**

**- இராமகிருஷ்ணர்-**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்கள் நினைவுகளுடன் ஈராண்டுகள்



## அமரர் செல்வராணி சகாதேவன்

(ஓய்வு நிலை அதிபர் யா/ கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை)

**மண்ணிற்கு** 27.09.1952 **விண்ணிற்கு** 07.06.2022


ஓர் ஆளுமைப் பெண்ணாக,
குடும்பத் தலைவியாக
எம்முடன் வாழ்ந்து சென்ற
நாட்களை நினைவு கூர்ந்து
நிற்கின்றோம்.

47 புகையிரத நிலைய வீதி,
கொக்குவில்.

**டடா, சனா, வாசுகி, நிலாஷன்**

# மரண அறிவித்தல்

**தோற்றம்** 21 . 04 . 1994



**மறைவு** 12 . 06 . 2024

## Dr.பிரேமேந்திரராஜா கிரிஷாந்

(Dr. பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை, பழைய மாணவன் கொழும்பு பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரி)

பிரான்சிஸ் வீதி, வெள்ளவத்தையை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட Dr.பிரேமேந்திரராஜா கிரிஷாந் நேற்று முன்தினம் (12.06.2024) புதன்கிழமை அகாலமரண மடைந்தார்.

அன்னார் பிரேமேந்திரராஜா - சுரேசா தம்பதியரின் அன்பு மகனும், ஸ்கந்தமூர்த்தி மற்றும் காலஞ்சென்றவர்களான பத்மாவதி, தம்பாப்பிள்ளை, பூபதி ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.06.2024) வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

27/22 வளாக வீதி (கம்பஸ் லேன்)
திருநெல்வேலி.

(CS/55366) J-1

தகவல்:
குடும்பத்தினர்
077 508 5778

# அந்தியேட்டி சபிண்டிகரண அழைப்பு



கடந்த 16.05.2024 அன்று சிவபதமடைந்த
எமது குடும்பத் தலைவி

**அமரர்**

## தங்கராசா சாரதாதேவி

**தோற்றம்** 11.10.1941 **மறைவு** 16.05.2024

***திதி : வைகாசி வளர்பிறை நவமி***

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை (15.06.2024) சனிக்கிழமை அதிகாலை 4.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று அஸ்தி கீரிமலை புனித தீர்த்தக்கரை யில் கரைக்கப்படும். அதனைத் தொடர்ந்து சபிண்டிகரண வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று ஆத்மசாந்திப் பிரார்த்தனைகளை தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.**

"சாரதா இல்லம்"
அல்வாய் வடக்கு, அல்வாய்.

(CS/28137) J-1

**குடும்பத்தினர்**

# கேள்வி அறிவித்தல்

## வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, புத்தூர்

## சபை நிதி - 2024 ( கட்டம் VI)

01. வலிகாமம் கிழக்கு பிரதேச சபையானது சபைநிதியினைக் கொண்டு கீழ்காட்டப்பட்டுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள வேலைத்திட்டங்களுக்கு கொடுப்பனவிற்கு பயன்படுத்த உத்தேசித்துள்ளது.

02. **தலைவர், உள்ளூராட்சிமன்ற பெறுகைக்குழு, வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, புத்தூர்**, வலிகாமம் கிழக்கு பிரதேச சபை சார்பாக தகுதி வாய்ந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகளை கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட வேலைகளுக்காக கோருகின்றார்.

03. தேசிய போட்டி கேள்வி கோரல் நடைமுறைக்கு அமைவாகவும் நிதி அமைச்சினால் வெளியிடப்பட்ட 01.03.2024 ஆம் திகதிய 01/2024 ஆம் இலக்க பொது அரச நிதி சுற்றறிக்கைக்கு அமைவாகவும் கேள்வி கோரப்படுகின்றது கேள்வி பெறத் தகுதியுடையவராவதற்கு வெற்றிபெறும் கேள்விதாரர் கறுப்புப் பட்டியலில் (Black List) சேர்த்துக் கொள்ளப்படாதவராகவும், கீழுள்ள அட்டவணையில் காட்டியபடி பொருத்தமான தரத்தில் கட்டுமான துறையில் நிர்மாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையில் (CIDA) பதிவுகள் மேற்கொள்ளப்பட்டிருத்தல் வேண்டும்.

04. தேவையான தகைமைகள் கேள்வி ஆவணம் பகுதி 4 இல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலதிக தகவல்கள் தரவு அட்டவணை (Schedule) கேள்வி ஆவணம் பகுதி 5 இல் காட்டப்பட்டுள்ளது.

05. பெறுமதிசேர்வரி (VAT) பதிவினைக் கொண்டவர்கள் கேள்விகள் சமர்ப்பிக்கப்படும்போது பெறுமதிசேர்வரி (VAT) சான்றிதழ் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். அவ்வாறான ஆவணங்கள் சமர்ப்பிக்கப்பட்ட கேள்விதாரர்களுக்கு மட்டுமே சபையினால் பெறுமதிசேர்வரி (VAT) கொடுப்பனவு மேற்கொள்ளப்படும்.

06. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் **தலைவர், பெறுகைக்குழு வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, புத்தூர்.** (தொலைபேசி இல: -021-205 8867) அவர்களிடமிருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம். அத்துடன் மேற்கூறிய இடத்தில் வேலை நாட்களில் காலை 09:00 மணிமுதல் மாலை 3:00 மணிவரை 2024.06.14 ஆம் திகதியில் இருந்து 2024.06.27 ஆம் திகதி வரை கேள்வி ஆவணங்களை பார்வையிடலாம்.

07. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமான கேள்வி ஆவணமொன்றை ஆங்கில மொழியில் தலைவர், பெறுகைக்குழு **வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, புத்தூர்.** அவர்களிடமிருந்து 2024.06.14 ஆம் திகதியிலிருந்து 2024.06.27 ஆம் திகதி வரையான வேலை நாட்களில் காலை 09:00 மணி தொடக்கம் மாலை 3:00 மணிக்கும். 2024.06.28 ம் திகதி காலை 9:00 மணி தொடக்கம் 10:00 மணி வரைக்கும் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா 3000/- செலுத்தி பெற்றுக்கொள்ளலாம். இத்தொகை பணமாகச் செலுத்தப்பட வேண்டும்.

08. கேள்வியினை இரு பிரதிகளில் தயாரித்து **தலைவர், பெறுகைக்குழு , வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, பருத்தித்துறை வீதி புத்தூர், யாழ்ப்பாணம்,** எனும் முகவரிக்கு 2024.06.28 ஆம் திகதி பி.ப 2:00 மணிக்கு முன்பதாக கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கப்பட வேண்டும் அல்லது அலுவலகத்தில் வைக்கப்பட்டிருக்கும் கேள்விப் பெட்டியில் இடப்பட வேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது கேள்வி நேரம் முடிவடைந்த உடனேயே வருகைதரும் கேள்விதாரர் அல்லது அவர்களது பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.

09. கேள்வி, கேள்விப்பிணை செல்லுபடியாகும் காலம், கேள்வி பிணை வைப்புத் தொகை என்பன கீழே அட்டவணையிற் காட்டப்பட்டுள்ளது

10. கேள்வி கோரல் பற்றிய முன் கேள்வி கூட்டம் வலிகிழக்கு பிரதேச சபை மாநாட்டு மண்டபத்தில் 2024.06.20 ஆம் திகதி மு.ப.10:30 மணிக்கு நடைபெறும். இக்கூட்டத்தில் ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் கலந்து கொள்ளலாம். இதற்கு எதுவித கொடுப்பனவுகளும் வழங்கப்படமாட்டாது.

| ஒப்பந்த இலக்கம் | வேலை விபரம் | மதிப்பீட்டுத் தொகை (மில்லியனில்) | ஒப்பந்த காலம் | வேண்டப்படும் தரம் | கேள்வி சமர்ப்பிக்கப்படும் இறுதித் திகதியிலிருந்து கேள்வி செல்லுபடியாகும் காலம் | வேண்டப்படும் கேள்விப் பிணை | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | பிணை வைப்பு (ரூபா) | செல்லுபடியாகும் காலம் |
| NP/14/41(13)/4/Council/ PVI/2024/26 | பழைய கிணற்றடி வீதி (கேணியடி வீதி) புனரமைப்பு – நீர்வேலி | 9.66 | 90 நாட்கள் | C7& C6 (வீதி நிர்மாணம் | 77 நாட்கள் | 97,000.00 | 11.10.2024 |
| NP/14/41(13)/4/Council/ DR/PVI /2024/27 | வல்லை மயான வீதி புனரமைப்பு – அச்சுவேலி வடக்கு | 7.83 | 90 நாட்கள் | C7 & C6 (வீதி நிர்மாணம் | 77 நாட்கள் | 79,000.00 | 11.10.2024 |
| NP/14/41(13)/4/Council/ DR/PVI /2024/28 | கரந்தன் 1 வது குறுக்கு வீதி புனரமைப்பு – உரும்பிராய் | 2.80 | 60 நாட்கள் | C8 & C7 (வீதி நிர்மாணம் | 63 நாட்கள் | 28,000.00 | 27.09.2024 |
| NP/14/41(13)/4/Council/ DR/ PVI/2024/29 | சர்வோதையா வீதி புனரமைப்பு – அச்சுவேலி | 3.39 | 60 நாட்கள் | C8 & C7 (வீதி நிர்மாணம் | 63 நாட்கள் | 34,000.00 | 27.09.2024 |

**தலைவர்,**
**உள்ளூராட்சிமன்ற பெறுகைக்குழு,**
**வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, புத்தூர்.**

(எ.42648) (N-1)

**2024.06.14**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தவறான முடிவெடுத்து இளம் பெண் இறப்பு!

யாழ்ப்பாணம், ஜூன் 14

இளம் குடும்பப்பெண் ஒருவர் தவறான முடிவெடுத்து உயிரிழந்துள்ளார். வட மராட்சி நெல்லியடிப் பகுதியில் இந்தத் துயரச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

முடக்காடு, நெல்லியடிப் பகுதியைச் சேர்ந்த 36 வயதுடைய குடும்பப் பெண்ணே தவறான முடிவெடுத்து உயிரி ழந்தவராவார். மரண விசா ரணை அதிகாரி வி.பாஸ்கரன் விசார ணைகளை மேற்கொண்டார். சடலம் உடற்கூற்றுப் பரிசோதனைக்காக பருத் தித்துறை ஆதார மருத்துவமனையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (ம-100)

# பயிற்சிப்பட்டறை

யாழ்ப்பாணம், ஜூன் 14

மாணவர்களுக்கான உளவியல் திறன்கள் ரீதியான பயிற்சிப் பட்டறை ஒன்று, சென்.பற்றிக்ஸ் கல்லூரியின் மேத்யூஸ் மண்டபத்தில் இன்று வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிக்கு இடம்பெறுமென பாடசாலை நிர்வாகத்தினர் தெரிவித்துள்ளனர். (பு)

## பெயர் மாற்றம்

இந்திரம்மன் கோவிலடி துன்னாலையில் வசிக்கும் **கந்தசாமி சுகிர்தராணி** ஆகிய நான் இன்று முதல் எனது பெயரினை **சுகிந்தராணி** என மாற்றம் செய்வதோடு சகல ஆவணங்களிலும் அவ்வாறே கையொப்பமிடுவேன் என இலங்கை சோசலிச குடியரசு மக்களுக்கு அறியத் தருகின்றேன்.

உண்மையுள்ள **சுகிந்தராணி**

(CS/28138) J-1

## பெயர் மாற்றம்

நாச்சிக்குடா கிளிநொச்சியில் வசிக்கும் **இராமச்சந்திரன் சிவகுமார்** ஆகிய நான் எனது பெயரை **இராமச்சந்திரன் நிப்ராஸ் அஹமட்** என மாற்றம் செய்வதோடு இனிவரும் சகல ஆவணங்களிலும் **இராமச்சந்திரன் நிப்ராஸ் அஹமட்** என்றே கையொப்பமிடுவேன் என இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசு மக்களுக்கு அறியத்தருகின்றேன்.

**இராமச்சந்திரன் நிப்ராஸ் அஹமட்**

(CS/55361) J-1

## வலிகாமம் கிழக்கு பிரதேச சபை புத்தூர் மீள்சுழற்சிக்குரிய திண்மக்கழிவு விற்பனைக்கான கேள்விகோரல் - 2024

எமது சபையினால் கழிவகற்றல் முறைமையின் கீழ் சேகரிக்கப்பட்டு தரம் பிரிக்கப்பட்ட பிளாஸ்ரிக் கழிவு.பொலித்தீன் கழிவு. தகரக் கழிவு, ரயர், கண்ணாடிக் கழிவு மற்றும் மீள்சுழற்சிக்கு பயன்படுத்தக் கூடிய பொருட்கள் ஆகியவற்றினை விற்பனை செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதன் பொருட்டு தரம் பிரிக்கப்பட்ட இக்கழிவுகளை 2024.07.01 -2024.12.31ஆந் திகதி வரையான காலத்திற்கு செல்லுபடியாகும் வண்ணம் ஒரு கிலோகிராமிற்கான கேள்விகள் கொள்வனவாளர்களிடமிருந்து எம்மால் கோரப்படுகின்றன.

| | | |
|---|---|---|
| கேள்விப்பத்திரம் வழங்கும் திகதி | :- | 18.06.2024 தொடக்கம் 28.06.2024 (அலுவலக நேரம்) |
| கேள்விப்பத்திரம் ஏற்கும் கடைசி திகதி | :- | 28.06.2024 முற்பகல் 10.00 மணி |
| கேள்விப்பத்திரம் திறக்கும் திகதி | :- | 28.06.2024 முற்பகல் 10.00 மணி |
| கேள்வி திறக்கப்படும் இடம் | :- | வலி.கிழக்கு பிரதேச சபை. தலைமை அலுவலகம். புத்தூர். |


### நிபந்தனைகள்.

01. விண்ணப்பதாரி இலங்கை பிரஜையாக இருத்தல் வேண்டும்
02. கேள்விப்படிவம் பெறவிரும்புவோர் கோரிக்கைக் கடிதத்துடன் தமது ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்துவதற்காக தே.அ.அட்டை அல்லது செல்லுபடியான கடவுச்சீட்டு அல்லது செல்லுபடியான சாரதி அனுமதிப் பத்திரம் ஆகியவற்றில் ஏதாவது ஒன்றுடன் அதன் பிரதியுடன் அலுவலக நாட்களில் மு.ப. 9.00 மணிமுதல் பி.ப. 3.00 மணிவரை சமுகமளித்து கேள்விப்படிவத்தினை பெற்றுக்கொள்ள முடியும்.
03. கேள்விப்படிவக் கட்டணமாக ரூபா. 500.00 செலுத்தி இரண்டு படிவங்களை பெற்றுக்கொள்ள வேண்டும்.
04. மீளளிக்கப்படக்கூடிய கேள்விவைப்புப் பணமாக ரூபா.5000.00 செலுத்தப்பட வேண்டும்.
05. கேள்விப் படிவம் இரு பிரதிகளில் தயாரிக்கப்பட்டு மூலப் பிரதி.இணைப் பிரதி என தனித்தனியான கடித உறையில் இட்டு இரு உறைகளையும் பிறிதொரு உறையில் இட்டு அரக்கு முத்திரையிட்டு உறையின் இடதுபக்க மேல் மூலையில் **மீள்சுழற்சிக்குரிய திண்மக்கழிவு விற்பனைக்கான கேள்வி கோரல் - 2024 எனக்குறிப்பிட்டு "செயலாளர், வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, புத்தூர்"** என்னும் முகவரிக்கு பதிவுத்தபால் மூலம் 2024.06.28 ஆம் திகதி முற்பகல் 10.00 மணிக்கு முன்னதாக கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைத்தல் வேண்டும். அல்லது நேரடியாக அலுவலகத்தில் அதற்கென வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உரிய நேரத்திற்கு முன்னர் இடப்படல் வேண்டும்.
06. கேள்வி திறக்கப்படும் நேரத்தில் கேள்வியாளரோ அல்லது அவரது பிரதிநிதியோ சமுகமளிக்கலாம்.
07. கூடிய கேள்வித் தொகை சமர்ப்பித்ததன் அடிப்படையில் தெரிவு செய்யப்படும் கேள்விதாரர் ரூபா 10000.00இனை பாதுகாப்பு பிணை வைப்பாக செலுத்தி உரிய ஒப்பந்தத்தினை மேற்கொள்ளுதல் வேண்டும். இப் பிணைப்பணமானது உரிய ஒப்பந்த காலப்பகுதிக்கு பின்னர் மீளளிக்கப்படும்.
08. கேள்வியில் சித்தியடையும் கேள்விதாரர்கள் ஒப்பந்தத்திற்கமைய எம்மால் அழைக்கப்படும் ஒவ்வொரு சந்தர்ப்பங்களில் உரிய தினத்தில் சமுகமளித்து நிறையின் அடிப்படையில் அன்றைய தினமே கட்டணத்தினை செலுத்தி தரம் பிரிப்பு நிலையத்திலிருந்து திண்மக்கழிவுப் பொருட்களை அப்புறப்படுத்துதல் வேண்டும்.
09. கேள்விதாரர்களில் ஒவ்வொரு பொருட்களுக்கும் கூடிய கேள்வியை சமர்ப்பிக்கும் கேள்விதாரர்கள் தனித்தனியாக தெரிவுசெய்யப்படுவார்கள்.
10. கேள்வி பத்திரத்தினை ஏற்கும் அல்லது நிராகரிக்கும் அதிகாரம் கேள்விச்சபைக்கு உண்டு.
11. மேலதிக விபரங்களை வலிகாமம் கிழக்கு பிரதேச சபையின் தலைமை அலுவலகத்தில் கடமை நேரங்களில் நேரியாகவோ அல்லது 0212058867, 0212058981 எனும் அலுவலக தொலைபேசி இலக்கங்களுக்கு தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ள முடியும்.

**இ.பகீரதன்**
**செயலாளர்.**
**வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, புத்தூர்.**
**14.06.2024**

(ச.42647) (N-1)

# ஆண்டுத் திவச நினைவு நாள் அழைப்பு



எங்கள் குடும்பத்தின் தலைவர்களான

**அமரர்**

## சுப்பிரமணியம் தர்மரட்ணம்

அவர்களதும்

**அமரர்**

## முருகர் விக்கினேஸ்வரன் (ஐஸ்கிறீம்)

அவர்களதும் முதலாம் மற்றும் மூன்றாம் ஆண்டுத் திவசமும் ஆத்மசாந்திப் பிரார்த்தனை நிகழ்வும் நாளை மறுதினம் (16.06.2024) ஞாயிற்றுக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும். அதனைத்தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்வுகளில் தாங்களும் பங்கு கொண்டு திருப்திதரவேண்டுமென்று அன்புரிமையுடன் அழைக்கின்றோம்.

**புளியம்பொக்கணை.** (CS/28416) J-1 **குடும்பத்தினர்**

# மரண அறிவித்தல்

தோற்றம் 12 . 01 . 1937



மறைவு 13 . 06 . 2024

## தங்கராசா பார்வதிப்பிள்ளை

**(ஓய்வு நிலை ஆசிரியர்)**

நீர்வேலி வடக்கு நீர்வேலியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட ஓய்வு நிலை ஆசிரியர் தங்கராசா பார்வதிப்பிள்ளை நேற்று (13.06.2024) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் - அன்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், கதிரித்தம்பி - இளையபிள்ளை தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற கதிரித்தம்பி தங்கராசா (ஓய்வு நிலை அதிபர்) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற தங்கம்மா மற்றும் நல்லம்மா, காலஞ்சென்ற இரத்தினம் மற்றும் மயில்வாகனம், வள்ளிப்பிள்ளை ஆகியோரின் பாசமிகு சகோதரியும், காலஞ்சென்றவர்களான செல்வஇரத்தினம், செல்வராசா, நடராசா தங்கமலர் மற்றும் யோகமலர் காலஞ்சென்றவர்களான பூமலர், நேசராசா, மல்லிகாமலர் ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.06.2024) வெள்ளிக்கிழமை காலை 8.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக நீர்வேலி சீயாக்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்:**
**செ.சபேந்திரராஜா (சுரேஸ் - கனடா - பெறாமகன்)**
**001 416 561 5249**
**ச.சேயோன் (மருமகன்) - 077 613 8222**

(CS/739) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதவிஉயர்வு இல்லாவிடின் தொழிற்சங்க நடவடிக்கை!

## ரயில்நிலைய அதிபர்கள் தெரிவிப்பு

உரிய பதவி உயர்வுகளை அடுத்துவரும் குறிப்பிட்ட காலத்துக்குள் வழங்காவிட்டால் தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபடவுள்ளதாக ரயில் நிலைய அதிபர்கள் சங்கம் அறிவித்துள்ளது.

இது தொடர்பான கோரிக்கைக் கடிதங்கள் ரயில் திணைக்கள பொது முகாமையாளர், போக்குவரத்து அமைச்சர் மற்றும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (ம-6)

# இலவச நடமாடும் சேவை

யாழ்ப்பாணம், ஜூன் 14

உடுவில், கால்நடை மருத்துவர் அலுவலகம் ஏற்பாடுசெய்த, பண்ணையாளர்களுக்கான இலவச நடமாடும் சேவை, ஏழாலை வடக்கு-கிழக்கு வாசிகசாலையில் இன்று வெள்ளிக்கிழமை காலை 9 மணி முதல் பி.ப.3 மணி வரை நடைபெறவுள்ளது. நடமாடும் சேவையில் கால்நடைகளுக்கான மருத்துவ சேவை, கால்நடை வளர்ப்புத் தொடர்பான ஆலோசனை, தடுப்பு மருந்து வழங்கல், மாடுகளுக்கு காதடையாளமிடல், பண்ணைகளைப் பதிவு செய்தல், திணைக்களப் பிரசுரங்கள் வழங்குதல் போன்ற சேவைகள் இலவசமாக வழங்கப்படும். ஏழாலைக் கிராமத்தவர்கள் மாத்திரமன்றி அயற் கிராமத்தவர்களும் இந்த இலவச சேவையில் கலந்துகொண்டு பயன்பெற முடியுமெனஉடுவில்கால்நடைமருத்துவரும் அலுவலகப் பொறுப்பதிகாரியுமான மருத்துவர் ஆர்.மீனயோகினி தெரிவித்துள்ளார். (ப-66)

## இந்துக் கல்லூரியில் ஆவணப்படத் திரையிடல்

யாழ்., ஜூன் 14


யாழ்ப்பாணத்தில் விற்பனைக்கு வந்துவிட்ட 'தங்கத் திரவம்' எனும் ஆவணப் படம் இன்று வெள்ளிக்கிழமை, மு.ப. 11 மணிக்கு யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் திரையிடப்படவுள்ளது. (ஒ-இ)

## விவசாய வளர்ச்சிக்கு ஓமானுடன் ஒப்பந்தம்

நாட்டில் விவசாயத்தை மேம்படுத்தும் நோக்கில் இலங்கை மற்றும் ஓமானுக்கிடையே புரிந்துணர்வு ஒப்பந்தமொன்று கைச்சாத்திடப்பட்டுள்ளது. விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீரவும் ஓமான் தூதுவரும் இந்த உடன்படிக்கையில் கைச்சாத்திட்டனர். இரு நாடுகளுக்கும் இடையிலான உத்தியோகபூர்வ பயணங்கள், ஆய்வுகள் மற்றும் விவசாய உற்பத்திப் பொருள்களின் இறக்குமதி, ஏற்றுமதிக்கு இந்த ஒப்பந்தம் வலுச்சேர்க்கும் என்று தெரிவிக்கப்படுகிறது. (ச-இ)


# துயர் பகிர்கின்றோம்

## அருட்தந்தை றேஜீஸ் இராஜநாயகம்



பிறப்பு - 12.11.1948
குருவாக - 16.05.1973
இறப்பு - 11.06.2024



யாழ். மறைமாவட்ட குருவாகிய அருட்தந்தை றேஜீஸ் இராஜநாயகம் அடிகளார் கடந்த (11.06.2024) செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அருட்தந்தை றேஜீஸ் இராஜநாயகம் மன்னார் மறைமாவட்டத்தில் விடத்தல்தீவு பங்கிலும், யாழ். மறைமாவட்டத்தில் புதுக்குடியிருப்பு, நாரந்தனை பங்குகளிலும் பங்குத்தந்தை ஆகவும், யாழ். பல்கலைக்கழக நல்லாயன் கத்தோலிக்க ஆன்மீக பணியக இயக்குநராகவும், புனித மடுத்தினார் சிறிய குருமடம், புனித சவேரியார் பெரிய குருமடம் ஆகியவற்றில் விரிவுரையாளராகவும், ஆன்மீக வழிகாட்டியாகவும் பல ஆண்டுகள் பணியாற்றியுள்ளார்.

அருட்தந்தை றேஜீஸ் இராஜநாயகம் அடிகளாரின் இறுதி நல்லடக்க ஆராதனைகள் யாழ். மரி அன்னை பேராலயத்தில் நேற்று (13.06.2024) வியாழக்கிழமை நடைபெற்றது.


அருட்தந்தை றேஜீஸ் இராஜநாயகம் அடிகளாரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக இறைவனிடம் மன்றாடுவோம்.

ஆயர் இல்லம்
யாழ்ப்பாணம்

தகவல்:
குரு முதல்வர்
யாழ். மறைமாவட்டம்

(CR 42649)S-1

# மரண அறிவித்தல்



தோற்றம் 17 . 10 . 1966
மறைவு 13 . 06 . 2024

## பிலிப் றோய்லன்ஸ் (செல்வா, பிலிப்)

யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாகவும் சில்லாலையை வசிப்பிடமாகவும் கொண்ட பிலிப் றோய்லன்ஸ் (செல்வா. பிலிப்) நேற்று (13.06.2024) வியாழக் கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பிரான்சிஸ் பிள்ளை - லூர்தம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான இராயப்பு - மேரிசெசிலியா தம்பதியரின் மருமகனும், ஆன் யூலியற் றதினி (பிரதி அதிபர், யா/இளவாலை கன்னியர் மடம்) அவர்களின் கணவரும், அன்ரனற் றிஷ்னி (JAE, குடிசார் எந்திரவியல் பட வரைஞர்) , அன்ரன் றிஷான் (ATI, பொறியியல் பீட மாணவன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், சேகர், தாசன், பிறேமா, அஞ்சலோ, குமார் , ஜெயா, சீலன் ஆகியோரின் அன்பு சகோதரனும், காலஞ்சென்ற ஜஸ்ரின் றெனோ மற்றும் றொனால்ட் யூட் (லண்டன்), மரிய வில்மா றஜனி (லண்டன்), வெலிசிற்றா றமணி (அதிபர், யா/மாதகல் சென்.தோமஸ் றோமன் கத்தோலிக்க பெண்கள் பாடசாலை) அவர்களின் மைத்துனரும் ஆவார்.


அன்னாரின் பூதவுடல் அவரது இல்லத்திலிருந்து நாளை (15.06.2024) சனிக்கிழமை எடுத்துச் செல்லப்பட்டு சில்லாலை புனித கதிரை மாதா ஆலயத்தில் பி.ப 3.00 மணிக்கு இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு சில்லாலை புனித கதிரை மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினார், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மகன் - 076 626 7667
மகள் - 076 792 0927

தகவல்:
குடும்பத்தினர்

(CS/55365) J-1

# மரண அறிவித்தல்



தோற்றம் 27 . 03 . 1942
மறைவு 11 . 06 . 2024

## செல்லையா கார்த்திகேசு

கந்தர்மடத்தைப் பிறப்பிடமாகவும், இணுவிலை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா கார்த்திகேசு கடந்த 11.06.2024 செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லையா - கௌரி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை - சின்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும், பரமேஸ்வரியின் அன்புக் கணவரும், கழுக்குன்றன் (London), கௌரி (Germany), கல்யாணி (France), நந்தினி, எல்லாளன் (France), செவ்வேள் (London) ஆகியோரின் பாசமிகு தந்தையும், இராஜினிமலர் (London), தவசோதி (Germany), மகேஸ்வரன் (France), சிவாகரன் (அஞ்சல் அதிபர் - அச்சுவேலி), விஷ்ணுப்பிரியா (London) ஆகியோரின் மாமனாரும், கணேசநாதன் (Canada), பூலோகநாயகி, இலட்சுமணநாதன் (சிவசம்பு களஞ்சியம்), காலஞ்சென்ற கைலாயநாதன் மற்றும் மகேஸ்வரி (London) ஆகியோரின் சகோதரரும், தனலட்சுமி (Canada) காலஞ்சென்றவர்களான சண்முகநாதன், அருந்ததி மற்றும் தேவபாலன் (London), காலஞ்சென்ற குணரத்தினம் மற்றும் பண்டிதர் ச.வே. பஞ்சாட்சரம் (Canada), ஞானேஸ்வரி, கமலேஸ்வரி, ஈஸ்வரி, வைகுந்தவாசன் (France) ஆகியோரின் மைத்துனரும், காலஞ்சென்றவர்களான சண்முகநாதன், தவராசா, திருநாவுக்கரசு மற்றும் விவேகானந்தசிவம் (Canada), இரத்தினேஸ்வரி (France) ஆகியோரின் சகலனும், பவித்திரா - தயாபரன், பிரதீபன் - சங்கீதா, பிரதாபன் - பிருந்தா, றஜிந்திரா, விபூர்தினி - இரமணன், மாதுளன், துவாரகன், மாதங்கி, தனுஸ்ஸன், வரகுணன், தேமதுரன், ஆய்ஷன், அபினுஷன், அவனீஷ் ஆகியோரின் பேரனும், திவியா, தானியா, தனுயன், அர்ச்சனா, சிவா, வியான், ரியான் ஆகியோரின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.06.2024) வெள்ளிக்கிழமை காலை 8.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக காரைக்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

[illegible]
இணுவில் மேற்கு, இணுவில்.

(CS/55360) J-1

தகவல்:
குடும்பத்தினர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உற்சாகமாய் இருப்போம்
நீரிழிவு நோயை தடுப்போம்
GINSOMIN




சுறுசுறுப்பான, புத்துணர்வான, பலமான மற்றும் மகிழ்ச்சியான வாழ்க்கைக்கு

Ginsomin இன் பிரதான கூறான அசல் கொரியன் பன்க்ஸ் ஜின்சென் உடலில் இன்சுலின் செயற்பாட்டை மேம்படுத்துவதோடு இன்சுலின் எதிர்ப்பு செயற்பாட்டை குறைக்கிறது என்பது மருத்துவ ரீதியில் உறுதி செய்யப்பட்டுள்ளது.

நாடளாவிய ரீதியிலான சுப்பர் மார்க்கட்டுகள் மற்றும் பாமசிகளில் பெற்றுக்கொள்ளலாம்.

MEGA We care
For Your Wellness
www.megawecare.lk

077 34 100 71
011 43 753 64

YouTube f
Ginsomin Srilanka

இறக்குமதி செய்து விநியோகிப்போர்: A Baur & Company (Pvt) Limited

NIPPON
The Original
தர நிர்ணய சபையினால் அங்கீகரிக்கப்பட்டு நேரடியாக தொழிற்சாலையிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டது
No.1 Seller




1 YEAR
0.6L
1L
1.5L
1.8L
2.2L
2.8L
4300/- upwards

லங்கா நிப்போன்
20, Keyzer Street, Colombo 11. 011 2437735 / 011 2437736
info@lankanippon.com | www. lankanippon.com
போலிகளில் அவதானமாயிருங்கள்..!

## தேர்தலில் போட்டியா?

# அடுத்த வாரத்தில் அறிவிப்பார் ரணில்

கொழும்பு, ஜூன் 14

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவது தொடர்பான அறிவிப்பை எதிர்வரும் 21 ஆம் திகதி ஜனாதிபதி வெளியிடுவார் என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் காமினி லொக்குகே தெரிவித்துள்ளார்.

ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாகப் பதவியேற்று 2 வருடங்கள் நிறைவுபெறும் நாளான ஜூன் 21 இல் தேர்தலில் போட்டியிடும் அறிவிப்பை அவர் வெளியிடுவார்.

ஜனாதிபதியின் அறிவிப்பு வெளியான பின்னர் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனக் கட்சியின் நிலைப்பாடு அறிவிக்கப்படும். கட்சிகூடி உரிய வகையில் முடிவை எடுக்கும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ச-44)

# போதைப்பாக்கு விற்பனை உயர்வு

## பொலிஸார் நடவடிக்கையில்லை வவுனியா மக்கள் விசனம்

வவுனியா, ஜூன் 14

வவுனியாவில் மாவா எனப்படும் போதை கலந்த பாக்கு விற்பனை அதிகரித்து வருகின்றது. இதுதொடர்பில் பொலிஸாருக்கு அறிவித்தல் வழங்கினாலும் நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை என்று பொதுமக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

வவுனியா பூந்தோட்டம் வீதியில் தென்னந்தோட்டத்தடி மற்றும் பூந்தோட்டம் சந்தி, கற்குழி, தேக்கவத்தை உட்பட வவுனியா நகரின் பல்வேறு பகுதிகளிலும் மாவா எனப்படும் போதை கலந்த பாக்கு விற்பனை இடம்பெற்று வருகின்றது.

இளைஞர் குழுக்கள் அதிகளவில் கூடி நின்று அவற்றைக் கொள்வனவு செய்வதை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது.

எனவே பொலிஸார் உடன் நடவடிக்கை எடுத்து போதைப்பொருள் பாவனையை ஒழிக்க வேண்டும் என்றும் பொதுமக்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். (ச-110)

# அடுத்த சுற்று வாய்ப்பை பலப்படுத்திய பங்களாதேஷ்

## இலங்கை வெளியேற்றம்

நெதர்லாந்து அணியுடனான நேற்றைய ஆட்டத்தில் 25ஓட்டங்களால் வெற்றியீட்டியதன் ஊடாக சுப்பர் 8 சுற்றுக்குச் செல்லும் வாய்ப்பை பலப்படுத்தியது பங்களாதேஷ் அணி. இதன் ஊடாககுழுநிலையுடன் இலங்கை அணி உலகக் கிண்ணத் தொடரிலிருந்து வெளியேறுகின்றது.

உலகக் கிண்ண ரி - 20 தொடரின் 27ஆவது ஆட்டம் இலங்கை நேரப்படி நேற்று இரவு இடம்பெற்றது. நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற நெதர்லாந்து முதலில் பந்துவீச்சை தேர்வு செய்தது.

பங்களாதேஷ் அணி 5 இலக்குகளை இழந்து 159 ஓட்டங்களைப்பெற்றது. சகிப் அல்ஹசன் 46 பந்துகளில் 64 ஓட்டங்களை ஆட்டமிழக்காது பெற்றுக்கொடுத்தார். பந்து வீச்சில் ஆர்யன் டுட், மெக்கேரன் ஆகியோர் தலா 2 இலக்குகளைக் கைப்பற்றினர்.

கடினமான இலக்கை நோக்கித் துடுப்பெடுத்தாடிய நெதர்லாந்து அணி 8 இலக்குகளை இழந்து 134 ஓட்டங்களை மாத்திரம் பெற்று 25 ஓட்டங்களால் தோல்வியடைந்தது. சைபிராண்ட் 22 பந்துகளில் 33 ஓட்டங்களை அதிகபட்சமாகப் பெற்றுக்கொடுத்தார். பந்துவீச்சில் ஹொசைன் 3 இலக்குகளைக் கைப்பற்றினார். ஆட்டநாயகனாக சகிப் அல் ஹசன் தெரிவானார். (ஒ-5)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




சுற்றுச்சூழல் தினத்தை முன்னிட்டு லைக்கா ஞானம் அறக்கட்டளை நிறுவனம், மன்னார் மாவட்ட செயலகத்துடன் இணைந்து மன்னார் பேசாலை கடற்கரை மற்றும் பேசாலை படகுத்துறையில் சுத்தப்படுத்தல் பணி மற்றும் விழிப்புணர்வு நிகழ்வுகளை அண்மையில் முன்னெடுத்தது. (ச-159)



## 'சுற்றாடல் இதழ்' வெளியீடு

கிளிநொச்சி, ஜூன் 14

உலக சுற்றாடல் தினத்தை முன்னிட்டு, கிளிநொச்சி அம்பாள் குளம் விவேகானந்தா வித்தியாலயத்தில் 'சுற்றாடல் இதழ்' வெளியீட்டு நிகழ்வு, அண்மையில் இடம்பெற்றது.

பாடசாலை அதிபர் திருமதி ஜெயா மாணிக்கவாசகன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் வலயக் கல்வி அலுவலகத்தின் சுற்றாடல் ஆணையாளரும், தகவல் தொழில்நுட்பப் பாட ஆசிரிய ஆலோசகருமான குமரன் சுற்றாடல் இதழை வெளியிட்டுவைக்க மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் வடக்குப் பணிப்பாளர் பெற்றுக்கொண்டார்.

நிகழ்வில் கரைச்சி கோட்டக் கல்வி அதிகாரி, ஆசிரிய ஆலோசகர்கள், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ப-52)




பலாலி வடக்கு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையும் Clean Ocean Force நிறுவனமும் இணைந்து நடத்திய சர்வதேச கடல்தின நிகழ்வு பாடசாலையை அண்டிய கடற்கரை பகுதியில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்றது. மாணவர் மத்தியில் கடல்சார் சூழலைப் பேணுமுகமாகப் பல்வேறு போட்டி நிகழ்வுகள் நடத்தப்பட்டு வெற்றிபெற்ற மாணவருக்கு சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. (ச-159)



கறுவாச் செய்கைக்கான வழிகாட்டியான சுந்தரமூர்த்தி புவனகுமார் தொகுத்தெழுதிய 'செல்வம் தரும் கறுவா' எனும் நூல் வெளியீட்டுவிழா திருநெல்வேலியில் அமைந்துள்ள யாழ். மாவட்ட விவசாயப் பயிற்சி நிலையத்தில் அண்மையில் இடம்பெற்றது. நிகழ்வில் ஓய்வுநிலை ஆங்கிலமொழி கற்பித்தல் பேராசிரியர் ம.சரவணபவஜயர், மூத்த எழுத்தாளர் வடகோவை வரதராஜன், வடமாகாண விவசாயப் பணிப்பாளர் சுகந்தினி செந்தில்குமரன், யாழ். மாவட்ட பிரதி மாகாண விவசாயப் பணிப்பாளர் அஞ்சனாதேவி சிறீரங்கன், யாழ். பல்கலைக்கழக சித்த மருத்துவ அலகின் தலைவர் விவியன் சத்தியசீலன், கறுவாப் பண்ணையாளர்கள் மற்றும் தொழிலாளர்கள் கலந்துகொண்டனர். (ஓ-25-27)



கிளிநொச்சி, பாரதிபுரம் மகா வித்தியாலயத்தில், பிரபஞ்சம் நிகழ்ச்சித் திட்டத்தின் ஏற்பாட்டில் 'ஸ்மார்ட்' கணினி வகுப்பறை ஒன்று, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவால் கடந்த ஞாயிற்றுக்கிழமை திறக்கப்பட்டது. (ப-113-214)

## கண்டல் தாவரம் மீள் நடுகை

மன்னார், ஜூன் 14

சர்வதேச சுற்றுச்சூழல்தினத்தை முன்னிட்டு, 'கடற்கரையோரங்களைப் பாதுகாப்போம்' எனும் தொனிப்பொருளில், மன்னார், கோந்தைபிட்டிக் கரையோரப் பகுதிகளில் கண்டல் தாவரங்கள் கடந்த ஞாயிற்றுக்கிழமை மீள் நடுகை செய்யப்பட்டன.

மன்னார் உப்புக்குளம் அல் அஸ்ஹர் மீனவ கூட்டுறவுச் சங்கத்தின் ஏற்பாட்டில், மன்னார் கடற்றொழிலாளர் இணையத்தின் செயலாளரும் வடமாகாண கடற்றொழில் இணையத்தின் ஊடகப் பேச்சாளருமான என்.எம்.ஆலம் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில், மன்னார் பிரதேச செயலாளர் ம.பிரதீப் மற்றும் கடற்றொழில் திணைக்கள சிரேஷ்ட அதிகாரி பவநிதி, உப்புக்குளம் பள்ளிவாசல் இமாம், மன்னார் பிரதேச செயலக பதவி நிலை உத்தியோகத்தர்கள், மீனவர்கள், இளைஞர்கள், சிறுவர்கள், மாதர் அபிவிருத்தி ஒன்றியப் பிரதிநிதிகள், சமுர்த்தி உத்தியோகத்தர்கள், எனப் பலரும் கலந்துகொண்டனர். (ப-56-213)



சமத்துவக் கட்சியின் இளைஞர் அணியின் ஏற்பாட்டில், 'உதிரத்தால் ஒன்றிணைவோம்' எனும் தொனிப்பொருளிலான குருதிக்கொடை நிகழ்வு, சமத்துவக் கட்சியின் கிளிநொச்சி அலுவலகத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது. (ப-13-214)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடத்தலைக் கட்டுப்படுத்த வீதித்தடை உத்தரவு

கொக்காவில் வழியாக வெளியிடங்களுக்கு மணல், மரங்கள் போன்றவற்றைக் கொண்டு செல்வதற்குத் தடை விதிக்கப்பட் டுள்ளது.

துணுக்காய் பிரதேச செயலகத்தில் கடந்த செவ்வாய்க்கிழமைநடைபெற்ற பொது அமைப்புகள் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் இந்தத் தீர்மானம் எடுக்கப் பட்டுள்ளது. ஐயன்குளம், புத்துவெட்டுவான், பழையமுறிகண்டி ஆகிய கிராமங்களில் இருந்து தொடர்ச்சியாக மணல், கிரவல், மரங்கள், அகழ்வுப் பொருள்கள் போன்றவை கொக்காவில் வழியாக வெளி இடங்களுக்கு கொண்டு செல்லப்படுகின்றன. மேற்படி கிராமங்களில் கடந்த 15 ஆண்டுகளாக இவ் வாறான சட்டவிரோத செயற்பாடுகள் நடை பெற்றுவருகின்றன. இதனைத் தடுப்பதற்கு பொலிஸார் தவறிவிட்டனர் என்ற குற்றச்சாட்டு பொது மக்களால் தொடர்ச்சியாக முன்வைக் கப்பட்டு வந்த நிலையில் இந்தத் தடை உத்த ரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. (ஓ-25-13)

## தமிழ்ப்...

அவரது மாதாந்த கேள்வி பதில் அறிக் கையில் இதைக் குறிப்பிட்டுள்ளார். எதிர் வரும் ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்ப் பொதுவேட்பாளர் களமிறக்கப்படுவதன் அவசியம் பற்றியும் அதை எதிர்ப்பவர் கள்பற்றியும் அதில் சுட்டிக்காட்டியுள்ளார்.

தமிழ்ப் பொதுவேட்பாளர்களை எதிர்ப்ப வர்கள் தொடர்பில் அவரது அறிக்கை யில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

சம்பந்தன் கூறும் 'ஒஸ்லோ உடன்பாடு' பற்றிப் பார்ப்போம். ஒஸ்லோ உடன்பாடு என்று எதுவுமே உண்மையில் இல்லை. அது இருதரப்பார் அறிவிப்பு அல்லது அறிக்கையாகும். இருதரப்பாராலும் இவ்வாறாகக் கூறப்பட்டது என்று பதிவுக் காக எழுத்தில் இடப்பட்ட ஓர் ஆவணமே அன்றி தரப்பாரிடையிலான உடன்பாடு அல்ல. அது தற்போது வழக்கொழிந்து போய்விட்டது. அதன் அடிப்படையில் அரசாங்கத்தை 'அப்படிச் செய்' 'இப்படிச் செய்' என்று நிர்ப்பந்திக்க முடியாது. சம் பந்தன் இந்தத் தள்ளாத காலத்திலும் தமிழ்ப்பொதுவேட்பாளரை நிறுத்துவதை எதிர்க்கின்றார் என்றால் அதற்கான கார ணங்கள் தமிழர்தம் அரசியல் காரணங் களாக இருக்கமுடியாது. தமிழ் மக்கள் அதற்கான காரணங்களை ஊகித்து அறியவேண்டும்.

அடுத்து சுமந்திரனின் அங்கலாய்ப்பு. பொது வேட்பாளரை நிறுத்துவது ஒரு விஷப் பரீட்சை என்பதே அவரின் கருத்து. காரணம் ஏற்கனவே சமஷ்டி வேண்டும் என்று கட்சிகள் தீர்மானம் எடுத்துள்ளன. பொது வேட்பாளருக்குப் போதிய ஆதரவு கிட்டாவிடில் எமது சமஷ்டித் தீர்வுக்கான அத்தியாவசியமும் பலமும் அடிபட்டுப் போய்விடும் என்பது அவரின் கருத்து. இது ஓர் அத்திபாரமில்லாத அங்க லாய்ப்பு. தமிழ் மக்களின் சமஷ்டிக் கோரிக்கை அன்றும் இருந்தது. இன்றும் இருக்கின்றது.

எமக்கு பிரிவினையோ சமஷ்டியோ கிடைக்கும் வரையில் அல்லது எமது பிர தேசங்கள் பிறிதொரு நாட்டின் ஆட்சிக் குக் கீழ் வரும் வரையில் என்றும் இருக் கும். அப்படி வந்தாலும் நாம் அங்கும் சமஷ்டியையே கேட்போம். பொது வேட் பாளரை நிறுத்துவதால் எமது சமஷ்டிக் கோரிக்கை அடிபட்டுப் போகும் என்பது சுமந்திரனின் சட்டத்தரணி மூளையில் உதித்திருக்கும் ஒரு கற்பனைப்பிராந்தி. உண்மையில் எமது நிலையை இன்னும் ஸ்திரப்படுத்தி எம்மை சமஷ்டியை நோக்கி எடுத்துச் செல்ல வல்லதே தமிழ்ப் பொது வேட்பாளர் என்ற பதவிநிலை. வடக்கு - கிழக்கு மக்களின் தீர்ப்பைப் பெற சர்வ தேச நாடுகள் முன்வரவேண்டும் என்று கோருவது எவ்வாறு சமஷ்டிக் கோரிக் கையை வலுவற்றதாக்கும்? நாம் சமஷ் டியைக் கோரி தமிழ்ப் பொதுவேட்பா ளரை நிறுத்தவில்லையே! நாம் எமது குறைகளை, நிலைகளை, நிர்ப்பந்தங் களை அகில உலகுக்கும் எடுத்துரைக்க உள்ளோம். 'சமஷ்டியைத் தா' என்று தமிழ்ப் பொதுவேட்பாளர் கேட்கப் போவ தாகயார்சுமந்திரனுக்குக்கூறினார்களோ நான் அறியேன். அடுத்து அவர் அரசி யல் தலைவர்கள், அரசியல் கட்சிகளே இதனை முன்னெடுக்க வேண்டும் என்று கூறியுள்ளார். சிவில் சமூகச் செயற்பாட் டாளர்கள் ஆலோசனைகளை மட்டும் வழங்கலாம் என்றுள்ளார்.

ஒரு சமூகத்தின் சமூக சேவையாளர்கள் அல்லது செயற்பாட்டாளர்கள் அரசியல் வாதிகளுக்கு வாக்குகள் வழங்கும் மக்க ளிடையே இருந்து வருகின்றவர்கள். அவர்கள் அந்நியர்கள் அல்ல. சுமந்தி ரன் மனதிலே ஒரு தப்பபிப்பிராயம் குடி கொண்டுள்ளது. ஒருவர் எப்பாடுபட்டா வது நாடாளுமன்ற உறுப்பினராக வந் தால் அதன்பின் மக்களுக்குப் பேச இட மில்லை என்று நினைக்கின்றார். மக்க ளின் மனம் அறியாமல் அவர்களின் நல உரித்துகளுக்கு எதிராக ஒரு நாடா ளுமன்ற உறுப்பினர் நடந்து கொண் டால் அடுத்த தேர்தல் வரையில் மக்கள் அது பற்றி எதுவும் பேசமுடியாது என்ற வகையில் அவரின் கருத்தை முன்வைத் துள்ளார். நாம் யாவரும் பணி செய்வது எமது தமிழ் மக்களின் இன்றைய மற்றும் வருங்கால நலன் கருதியே.

சுமந்திரனின் கருத்துப்படி ஒரு நாடாளு மன்ற உறுப்பினர் தேர்தலில் வென்று விட்டால் அவர் அடுத்த ஐந்து வருடங்க ளுக்கு தான்தோன்றித்தனமாக நடந்து கொள்ளலாம் என்பதே. இவ்வாறு நினைத் தவர்கள்தான் தமது மக்களிடம் கேட்கா மல் ஆட்சியில் இருக்கும் அரசாங்கத்து டன் கதைத்துப் பேசிப் பல சுய நன்மை களைப் பெற்று வந்துள்ளார்கள்.

இன்று மக்களும் தமிழ் அரசியல் தலை வர்களும் சேர்ந்தே தமிழ்ப்பொதுவேட்பா ளரை முன்நிறுத்த முன் வந்துள்ளார் கள். அதில் எந்தத் தவறும் இல்லை. மத்திய அரசில் பதவி வகிக்கும் ஒருவ ருக்கு ஜால்ரா அடிக்க எண்ணி தமது மக்களைப்புறக்கணிக்கமுன்வருவோரை தமிழ்ச் சமூகம் மன்னிக்காது. மக்கள் சார்பில் இந்தச் செயற்பாட்டில் ஈடுபடுவ தாக இருந்தால் சுமந்திரன் எம்முடன் சேர்ந்து பயணிக்கட்டும். இல்லையேல் ஒதுங்கியிருக்கட்டும். சிங்கள வேட்பாளர் கள் நலன்கருதி தமிழ் மக்களின் நலன் களை விற்காது இருக்குமாறு அன்புடன் அவரைக் கேட்டுக் கொள்கின்றேன் - என்றுள்ளது. (அ-ஒ-இ)

## கொடுப்பனவுகளை...

ஊதிய உயர்வை நடைமுறைப்படுத்து மாறும், இதன் கொடுப்பனவுகளை வழங்குமாறும் வலியுறுத்தி பல்கலைக் கழககல்விசாரா ஊழியர்கள் தொடர்பணிப் புறக்கணிப்புப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். இந்த நிலையிலேயே, இந்த வருடத்தில் கொடுப்பனவுகள் மற் றும் ஊதிய உயர்வுக்குச் சாத்தியம் இல்லை என்று ஜனாதிபதி ரணில் அறி வித்துள்ளார்.

பல்கலைக்கழக கல்வி சாரா ஊழியர்க ளின் கோரிக்கைகள் தொடர்பாக பல்க லைக்கழக மானியங்கள் ஆணைக்குழு வின் தலைவர் பேராசிரியர் சம்பத் அமர துங்க ஜனாதிபதியுடன் தொடர்புகொண் டபோதே ஜனாதிபதி இவ்வாறு தெரிவித் துள்ளார். இதையடுத்து, பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்களை மாணவர்க ளின் கல்வியைப் பாதிக்காத வகையில், உடனடியாகப் பணிகளுக்குத் திரும்பு மாறு உயர்கல்வி அமைச்சின் செயலா ளர் திலக ஜயசுந்தரவால் நேற்று அனுப் பிவைத்துள்ள கடிதத்தில் குறிப்பிடப்பட் டுள்ளது. கடிதத்தின் பிரதிகள் இலங்கை யில் உள்ள சகல பல்கலைக்கழகங்களி னதும் துணைவேந்தர்களுக்கும் அனுப் பப்பட்டுள்ளன. (அ-ம-6-26)

## வன்முறைக்குழு...

சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவரு வதாவது:-

வீட்டார் வெளியே சென்றிருந்த நிலை யில் வீட்டுக்கு நேற்றுமதியம் சென்ற வன்முறை குழுவினர் வீட்டிலிருந்த தையல் இயந்திரம், குளிர்சாதனப் பெட்டி, ஜன்னல் கண்ணாடிகள், வீட்டுக் கதவு, ஒலிபெருக்கி சாதனங்கள், தொலைக் காட்சி உள்ளிட்ட பல பொருட்களை அடித் துடைத்து சேதமாக்கியதுடன், வீட்டில் இருந்த 2 இலட்சத்து 11 ஆயிரம் ரூபா பணம், 3 பவுண் சங்கிலி மற்றும் 2 பவுண் காப்பு என்பவற்றை திருடிச்சென்றுள்ளனர். இது குறித்து வட்டுக்கோட்டைப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப் பட்டது. பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டபோது, அயல் வீட்டில் இருந்த சி.சி.ரி.வி காட்சிகளை பார்வை யிட்டனர். இதன்போது தாக்குதலை மேற்கொண்டதாக நம்பப்படும் ஒருவர் வீட்டாரிடம் மன்னிப்புக் கேட்பதற்காக வந்தபோது பொலிஸார் அவரைக் கைது செய்துள்ளனர். மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. (அ-ஒ-27)

## யாரை...

வித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"ஐக்கிய மக்கள் சக்தியுடன் கூட்டணி அமைத்துள்ளோம். அந்த அணியுடன் பயணிக்கவே எதிர்பார்க்கின்றோம். தற் போதைய சூழ்நிலையில் சஜித்தை ஆத ரிக்கும் முடிவிலேயே இருக்கின்றோம். எனினும், கட்சி மாற்று முடிவை எடுத் தால் அது பற்றியும் பரிசீலிக்க வேண்டி வரும்.

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவது தொடர்பில் ஜனாதிபதியின் ரணிலின் சகாக்கள் அறிவிப்புகளை விடுத்திருந் தாலும், ரணில் விக்கிரமசிங்க இன்னும் அதிகாரபூர்வமாக அறிவிக்கவில்லை. அந்த அறிவிப்பை ரணில் விக்கிரமசிங்க விடுக்கும்வரை நம்ப முடியாது. தேர்த லில் ஐக்கிய மக்கள் சக்தியே வெற்றிபெ றும் என்ற அதிக நம்பிக்கை உள்ளது" - என்றார். (அ-ம-44)

## மகளை...

சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவரு வதாவது:-

32 வயதுடைய அந்தத் தாய், 13 வயது டைய அந்தப் பெண் பிள்ளை உறங்கிக் கொண்டிருந்தபோது அந்தப் பிள்ளை யினை தவறான முறையில் காட்டக்கூடி யதாக ஒளிப்படம் எடுத்துள்ளார். அதை அவதானித்த 10 வயதான மற்றொரு சிறுமி (சந்தேகநபரின் மற்றைய பிள்ளை) விடயத்தை தனது சித்திக்குத் தெரியப்ப டுத்தியுள்ளார். சித்தி பொலிஸாருக்குத் தெரியப்படுத்தியதைத் தொடர்ந்து சந்தே கநபரான சிறுமியின் தாய் கைது செய் யப்பட்டுள்ளார். மேலதிக விசாரணை களை புதுக்குடியிருப்பு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ-ம-19)

## கஞ்சா..

ஸாரால் நேற்றுக் கைது செய்யப்பட்டுள் ளார். நெல்லியடி அரச புலனாய்வுச் சேவையின் தகவலுக்கமைய மேற் கொள்ளப்பட்ட விசேட சோதனை நடவ டிக்கையின் போதே கற்கோவளத்தைச் சேர்ந்த மேற்படி நபர் கைது செய்யப்பட் டுள்ளதுடன் அவரிடம் இருந்து 2 கிலோ 300 கிராம் கஞ்சா மீட்கப்பட்டுள்ளது. கைது செய்யப்பட்ட நபருக்கு எதிராக சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள் ளன. (அ-ம-100)

## தபால்...

தபால் துறையில் நிலவும் 5 ஆயிரத்துக் கும் மேற்பட்ட வெற்றிடங்களை நிரப்பத் தவறியமை, உரிய பதவியுயர்வுகளை நடைமுறைப்படுத்தாமை உள்ளிட்ட கோரிக்கைகளை முன்வைத்தே இந்தப் போராட்டங்கள் இடம்பெற்றுவருகின்றன. யாழ்ப்பாணம், வவுனியா, மன்னார் மாவட்டங்களில் உள்ள தபால் திணைக் கள ஊழியர்களே இவ்வாறு போராட்டத் தில் ஈடுபட்டனர். (அ-ம-56-110)

## மாவாவுடன்...

முன்னெடுக்கப்பட்ட சிறப்புக் கண்கா ணிப்பு நடவடிக்கையின்போதே இந்தக் கைது முன்னெடுக்கப்பட்டுள்ளது. அவ ரிடம் இருந்து 10 கிராம் மாவா பாக்கு மீட்கப்பட்டுள்ளது. கைதான இளைஞரிடம் மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப் பட்டுள்ளன. (அ-ம-125)

## ஊடகவியலாளரின்...

பிரசுரங்கள் தாக்குதல் நடத்தப்பட்டுள்ள வீட்டில் வீசப்பட்டுள்ளன. அச்சுவேலிப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ-ம-26-23)

## 135 கிலோ...

வடமராட்சி கிழக்கு தாளையடிப் பகுதியில் பெருமளவான கஞ்சாப் பொதிகள் பதுக்கி வைக்கப்பட்டிருப்பதாக கடற்படைப் புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைத்த தக வலையடுத்து மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கையின்போதே மேற் படி கஞ்சாப் பொதிகள் மீட்கப்பட்டுள்ளன. மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக கஞ்சாப் பொதிகள் மருதங்கேணிப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள் ளன. (அ-ம-66-26)

## குளவிக்...

னர். 18 மாணவர்கள் தொடர்ந்தும் சிகிச்சை பெற்று வருகின்றனர். (அ-ம-113-27)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சுழிபுரம் றைனோஸ் வொலிபோல் பிறிமியர் லீக்

# தகுதிகாண் சுற்று 19அன்று ஆரம்பம்







யாழ்ப்பாணம், ஜூன் 14

'உதயன்' நாளிதழின் ஊடக அனுசரணையுடன் சுழிபுரம் றைனோஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் சுழிபுரம் றைனோஸ் வொலிபோல் பிறிமியர் லீக்கின் தகுதிகாண் சுற்றுப்போட்டிகள் எதிர்வரும் 19ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளன.

இதுவரை நடைபெற்ற லீக் முறையிலான ஆட்டங்களில் இளந்துளிர், சுழிபுரம் சூப்பர் கிங்ஸ், யங்ஸ் ஸ்ரார், அம்பாள் வொலி ஸ்டார், பிசி கிங்ஸ், சங்கானை சலஞ்சஸ் ஆகிய அணிகள் பங்குபற்றியிருந்தன.

லீக் ஆட்டங்களில் முதலிடத்தை சுழிபுரம் சுப்பர் கிங்ஸ் அணியும், இரண்டாம் இடத்தை பிசி கிங்ஸ் அணியும், மூன்றாம் இடத்தை யங்ஸ் ஸ்டார் அணியும், நான்காம் இடத்தை அம்பாள் வொலி ஸ்டார் அணியும் பெற்று தகுதிகாண் சுற்றுக்குத் தெரிவாகியுள்ளன. (எ-125)

## வங்கி மீதி வசதி (SHOW MONEY)

சகல நாடுகளுக்குமான விசாவினை உறுதிப்படுத்திக் கொள்ள குறைந்த கட்டணத்தில் வங்கி மீதி வசதிகள்
தொடர்புகளுக்கு: (CS/719) J-1
074 173 7684

## பிரியாணிக் கடை

உயர்தர பாஸ்மதி அரிசி
சிக்கன் பிரியாணி - 950/=
வீட்டு விநியோகம் - 200/= முதல்
K.K.S. வீதி, இணுவில்
தொடர்புகளுக்கு: 077 908 1886

## THE ROYAL COLLEGE OF JAFFNA

A/L 2026ம் ஆண்டு கலைப்பிரிவு வகுப்புகள்
தமிழ் - சின்னக்குழந்தை (B.A)
வரலாறு - P.லக்ஷன் (B.A) (Spl in History)
மீடியா - S.பிரஷாந் (Diploma in Media)
அரசியல் - து.லக்ஷிகா (B.A) (Spl in Political Science)
ஏனைய பாடங்களும் ஆரம்பமாகவுள்ளன
குபேரன் கட்டடமாடி, சங்கானை
TEL. 077 675 1649
(CS/55307) J-1

## தவறவிடப்பட்டுள்ளது

வவுனியாவிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி பேருந்தில் வந்தபோது 03.06.2024 திங்கட்கிழமை அன்று மயில்வாகனம் கிருபாசுதன் ஆகிய எனது **தேசிய அடையாள அட்டை (196528001145). வாகன அனுமதிப்பத்திரம்** மற்றும் **வாகன காப்புறுதிப்பத்திரமும்** தவறவிடப்பட்டுள்ளன. கண்டெடுத்தவர்கள் கீழ்க்கண்ட இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.
(CS/55367) J-1
தொடர்பு:- 077 145 7695

# ஊடகவியலாளர்களை அச்சத்தில் வைத்திருக்க விரும்புகிறது அரசு

## சரவணபவன் சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம், ஜூன் 14

வடமாகாணத்தில் தொடர்ந்தும் ஊடகவியலாளர்கள் பாதுகாப்பற்ற சூழலியே தமது பணியை முன்னெடுக்கின்றார்கள். அவர்கள் அவ்வாறு அச்சத்துக்குள் பணிபுரிவதையே அரசு விரும்புகின்றது என உதயன் குழுமத் தலைவரும் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினருமான ஈஸ்வரபாதம் சரவணபவன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் - அச்சுவேலியிலுள்ள ஊடகவியலாளரான தம்பிதுரை பிரதீபனின் வீடு புகுந்து நேற்று அதிகாலை தாக்குதல் நடத்தப்பட்டிருந்தது. பாதிக்கப்பட்ட அவரது வீட்டை நேரடியாகச் சென்று பார்வையிட்ட பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஊடகவியலாளர்கள் பாதுகாப்பற்ற சூழலிலேயே தமது பணிகளை முன்னெடுக்கின்றார்கள். இதை பல தடவைகள் நான் சுட்டிக்காட்டியிருக்கின்றேன். இங்கு கடந்த காலங்களில் இடம்பெற்ற ஊடகங்களுக்கு எதிரான தாக்குதல்களுக்கு உரிய விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு தண்டனை வழங்கப்பட்டிருக்குமானால் இவ்வாறான சம்பவங்கள் இடம் பெற்றிருக்காது.

பொலிஸார் இந்தச் சம்பவம் தொடர்பில் நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்துள்ளார்கள். ஆனால், எனக்கு நம்பிக்கையில்லை. பல தசாப்தங்களாக இந்த மண்ணில் பத்திரிகையை நடத்தி வருகின்றவன் என்ற அடிப்படையில், சிறிலங்கா பொலிஸார் இவ்வாறான சம்பவங்களுக்கு விசாரணை நடத்தி தீர்வைப்பெற்றுத் தரமாட்டார்கள்.

ஊடகவியலாளர்கள் சுதந்திரமாக துணிவுடன் செயற்பட வேண்டியவர்கள். அவர்கள் பயந்து செயற்படமுடியாது.

இந்தியா உட்பட உலக நாடுகளில் ஊடகவியலாளர்களுக்கான பாதுகாப்பு உறுதி செய்யப்பட்டுள்ளன. இந்த நாட்டில் ஊடகவியலாளர்களுக்கான அடிப்படை பாதுகாப்பு வசதிகூட ஏற்படுத்திக் கொடுக்கப்படவில்லை - என்றார். (ஒ-125)

## உலகத் தமிழ் பண்பாட்டு இயக்க பொன்விழாவும் 17வது பன்னாட்டு மாநாடும்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் ஏற்பாடுசெய்யப்பட்ட மாநாடு பல்கலைக்கழக சூழ்நிலை காரணமாக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளது.

1ஆம் நாள் - 14.06.2024 (வெள்ளிக்கிழமை)
மாலை 4.30 மணி
திவ்யமஹால் K.K.S. வீதி, தட்டாதெரு சந்தி.

2ஆம் நாள் - 15.06.2024 (சனிக்கிழமை)
காலை 9.00 மணி
தந்தை செல்வா அரங்கம்
யாழ். மத்திய கல்லூரி

பொன்விழா மாநாட்டுக்குழு,
உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கம்.
(CR 42650) A-1

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் கைதடிச் சந்தி அருகாமையில்
A-9 வீதி முகப்புடன் 14 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

- இரண்டு பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்.
- இருபதடிப்பாதை (20).
- கைதடிச் சந்தி 100M தூரம்.
- சித்த வைத்தியசாலை முன்பாக.
- பார்வை நேரம் காலை 6 மணி தொடக்கம் மாலை 6.00 மணி வரை.
- காணி கொள்முதல் செய்பவருக்கு பிரதேச சபை அனுமதி பெற்றுக் கொடுக்கப்படும்.
- ஒரு பரப்பின் விலை ரூபா. 2000000/= (இருபது இலட்சம் ரூபாய்)

Golden Real Estate (Pvt) Ltd.
077-029 4164
077-329 4130
077-294 1521

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111 செய்தி: news@uthayan.com விளம்பரம்:advt@uthayan.com
இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 14.06. 2024 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.